E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்
2022 ஜூலை 9 சனிக்கிழமை


# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 160 | Saturday 09, July, 2022 | 12 பக்கங்கள்

மே மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூனில்

## சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

### ஜூனில் மட்டும் 32,865 பேர் வருகை



கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதம் நாட்டுக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 8.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

06

## இலங்கையின் நிலைவரம் ஏனைய நாடுகளுக்கு முன்னெச்சரிகை

### ஐ.நா செயற்றிட்ட பணிப்பாளர் அச்சிம் ஸ்ரெய்னர் தெரிவிப்பு

இலங்கையில் தற்போது மிகவும் மோசமான நிகழ்வுகள் இடம்பெற்று வருவதை நாம் அவதானிக்கிறோம். இவை ஏனைய நாடுகளுக்கான எச்சரிக்கை சமிக்ஞையாகும்.

இந்த நெருக்கடியை எவ்வாறு உரியவாறு கையாள்வது என்பதைக் கண்டறிவது அந்தந்த நாடுகளின் கைகளிலேயே உள்ளது என ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் அச்சிம் ஸ்ரெய்னர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளும் கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலின் விளைவாகத் தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடியின் அழுத்தத்துக்கு

06

## மருத்துவர்கள் 1500 பேர் கடந்த 06 மாதங்களில் வெளிநாடுகளுக்கு

### ஹர்ஷ டி சில்வா MP டுவிட்டரில் கவலை



இந்த வருடத்தின் கடந்த 6 மாத காலப்பகுதியில் இலங்கையில் இருந்து சுமார் 1,500 மருத்துவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ட்விட்டர் செய்தியில்,

இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் இலங்கை மருத்துவ சபையினால் "நல்ல நிலைப்பாட்டிற்கான சான்றிதழ்" (Certificate of Good Standing) பெறுவதற்காக 1,486 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

06

SMS;CEB Care செயலி; தெர்மல் பிரின்ட்

## மின்கட்டணப் பட்டியலை வழங்க 03 புதிய வழிமுறை

### இலங்கை மின்சார சபை நடவடிக்கை

இதுவரை காலமும் மின்சாரக் கட்டணங்களை வழங்கும் போது பின்பற்றப்பட்டு வந்த அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும் கட்டணப் பட்டியல் முறைக்குப் பதிலாக மூன்று புதிய முறைகளை அறிமுகப்படுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, எதிர்காலத்தில் பாவனையாளர்களுக்கு மாதாந்த மின் கட்டணங்களை வழங்குவதில் கீழ்வரும் முறைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

1. Thermal printed bills அச்சிடப்பட்ட சிறு கட்டண பட்டியலை

06

எரிபொருள், எரிவாயு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விநியோகத்திற்கு நடவடிக்கை

# அசாதாரண நிலைமைக்கு சில நாட்களில் சுமுக தீர்வு

## இன்றைய போராட்டம் எதிர்கட்சிகளின் திட்டமிட்ட சதி



எரிபொருள், எரிவாயு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத் திட்டம் நிறைவடைந்துள்ளதாகவும், இன்னும் சில நாட்களில் நிலைமைக்கு தீர்வு காணப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (08) தெரிவித்துள்ளார்.

மிகவும் திட்டமிட்ட மற்றும் நீண்ட முயற்சிக்குப் பிறகு நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைக்கு தீர்வுகள் காணப்படும் நிலையில் மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் எதிர்க்கட்சி அரசியல் குழுக்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் மிகவும் வருத்தமளிக்கிறது எனவும், இது நாட்டை மீண்டும் பின்னோக்கி நகர்த்துவதாக ஜனாதிபதி ஊடக அறிக்கை மூலம் கூறியுள்ளார்.

அத்தியாவசிய மருந்துகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. இந்திய கடன் வசதிகளின் கீழ் 65,000 மெற்றிக் தொன் உரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 44,000 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றி வரும் முதலாவது கப்பல் இன்று (09) நாட்டை வந்தடையவுள்ளது. ஜூலை 12 முதல் எரிபொருள், எரிவாயு மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் தொடர்ந்து பெறப்படும்.

அத்தோடு பல்வேறு விவசாயத் திட்டங்களின் கீழ், நாட்டில் உணவுப் பற்றாக்குறையைத் தடுக்க அனைத்து முயற்சிகளும்

06



புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து மாட்டு வண்டியில் நோயாளர் ஒருவரை ஏற்றிக்கொண்டு செல்லும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் சிகிச்சை அளித்தவாறு செல்வதை காணலாம். இவர் கவனயீர்ப்புப் பேரணியாக நேற்று புதுக்குடியிருப்பு நகர்பகுதி ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் வரை சென்ற போது,.... படம்: மாங்குளம் குறூப் நிருபர்



## எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தியுள்ள IOC

### திங்கள் முதலே வழமை நிலைக்கு வரும்

03

## விமான நிலைய வண்டிகளின் கட்டணங்களில் அதிகரிப்பு

### பயணிகள் அதிர்ச்சி; யாழ்.செல்ல ரூ.73,00



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வாடகை வண்டிகளுக்கான புதிய கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாடகை வண்டியின் புதிய கட்டணத்தை பார்க்கும் பொழுது, கொழும்பிலிருந்து இந்தியாவிற்கு விமானத்தில் செல்ல முடியும் என தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்காவிலிருந்து

06

பொது மக்களுக்கு பொலிஸாரின் கோரிக்கை

## அமைதியான முறையில் ஒன்று கூடுவதை மதிக்கிறோம்

### சேதங்களை ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை



அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான மக்களின் உரிமையை பொலிசார் மதிக்கின்றனர். அதேவேளை பொது மற்றும் தனியார் சொத்துக்களை சேதப்படுத்தும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் மாஅதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். பொலிஸ் மாஅதிபர் பொதுமக்களுக்கு விடுத்துள்ள விசேட அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உரிமைகளை சட்ட கட்டமைப்பிற்குள்

06

## திங்கள் முதல் புகையிரத கட்டணங்கள் அதிகரிப்பு

### ஆரம்ப கட்டணம் ரூ.20 ஆகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ரயில் கட்டணங்களை எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது நடைமுறையில் உள்ள பஸ் கட்டணத்தோடு ஒப்பிடுகையில் அதன் அரைவாசியை விட குறைந்த கட்டண அதிகரிப்பே மேற்கொள்ளப்படும் எனவும் அந்த வகையில் ஆகக் குறைந்த கட்டணம்

06

## எரிபொருள் நிலையத்தில் இரு குழுக்கள் மோதல்

### ஒருவர் பலி; மூவருக்கு காயம்



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலி மாகால்லவில் நேற்று முன்தினம் இரவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் இருந்த இரு குழுக்களுக்கு இடையே மோதல்கள் இடம்பெற்றிருந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

06

எரிபொருள் விலைநிர்ணயத் தகவல்;

## ஜனகவை விசாரணைக்கு அழைக்க கஞ்சன கோரிக்கை

### 'கோப்' குழுவிற்கு தெரிவித்துள்ளதாக டுவிட்டரில் பதிவு



எரிபொருள் விலை நிர்ணயம் மற்றும் கொள்வனவு குறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோப் குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். ட்விட்டர் பதிவொன்றை

06

## ஸ்ரீலங்கன் விமான சேவைகள் அனைத்தும் வழமை போல

### இரத்துச் செய்யப்படலாம் என்பது பொய்ச் செய்தி

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் அனைத்தும் வழமைப் போல, இரத்துச் செய்யப்படலாம் என்று கூறப்படுவது பொய்யான தவல்களாகும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் பல விமானங்கள் இரத்துச் செய்யப்படலாம் என பரப்பப்படும் தகவல்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிராகரித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, ஒரு வாரத்துக்கும் மேலாக தகுந்த மாற்றங்களுடன் விமான நேர அட்டவணையை

06

## கருவாட்டின் விலைகள் என்றுமில்லாதவாறு உயர்வு

### மலையக பகுதிகளில் ரூ.2000 ஆக விற்பனை



மலையக பிரதேசங்களில் நெத்திலி கருவாட்டின் விலை மிகவும் அதிகரித்துள்ளதன் காரணமாக மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மலையக பகுதிகளில் ஒரு கிலோ கிராம் நெத்திலி கருவாடு ஆயிரத்து 700 ரூபா முதல் 2 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

06

## எதிர்க்கட்சித் தலைவருடன் TELO கட்சியினர் சந்திப்பு

### தமிழ் மக்களது பிரச்சினை உள்ளிட்ட விபரங்கள் ஆராய்வு



எதிர்க்கட்சித் தலைவருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று மதியம் 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

06

வீட்டையும் ஆகாயத்தை நோக்கி 03 தடவைகள்

## துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பியோடிய லலித் MP

### சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை

03


## கடந்த இரண்டு வருடங்களில் வீதி அபிவிருத்திக்காக ரூ. 44,300 கோடி

### செலவிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிக்கை

03

40,000 மெ.தொன் நிறைகொண்ட

## இந்திய உரம் இன்று நாட்டுக்கு வருகிறது



இந்தியாவிடமிருந்து கடன் அடிப்படையில் பெறப்படும் 40,000 மெற்றிக் தொன் உரம் இன்று (9) இலங்கைக்கு கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து, அடுத்த இரண்டு நாட்களுக்குள் 25,000 மெற்றிக் தொன் உரம் கொழும்பிற்கு எடுத்து வரப்படவுள்ளது.

06

## ஜப்பான் முன்னாள் பிரதமர் மீது சூடு

### மார்பில் இரு குண்டு பாய்ந்தது



ஜப்பான் முன்னாள் பிரதமர் சின்சோ அபே நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரசார நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

நாரா நகரில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் அபே உரையாற்றியபோது, அவரை பின்புறத்தில் இருந்து அடையாளம் தெரியாத நபர் ஒருவர்

06

நிற்காது சென்ற ரயில்கள்;

## ஆத்திரமடைந்த பயணிகள் ரயில் நிலையம் மீது தாக்குதல்

### பாணந்துறை நிலையத்துக்கு சேதம்



தாம் வீடுகளுக்கு செல்ல ரயில் இன்மையால் ஆத்திரமடைந்த பணிகள், பாணந்துறை நிலைய அதிபர் அலுவலகம் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் ரயில் நிலைய அதிபரின் அலுவலகம் பலத்த

06

# சர்வதேச செய்திகள்

## இந்தியாவில் அதிகரித்து வரும் டிஜிட்டல் பணப்புழக்கம்

### இந்திய ரிசர்வ் வங்கி தகவல்




கொடுக்கல் வாங்கலில் பணத்துக்குப் பதிலாக டிஜிட்டர் பணப் பரிமாற்றம் பயன்பாடு இந்தியாவில் அதிகரித்து வருவதாகவும் 40 நாடுகளை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்ததில் இந்தியா 25ம் இடத்தில் காணப்படுவதாகவும் இந்திய மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2019ம் ஆண்டில் முதல் தடவையாக இக் கணிப்பை 2017ம் ஆண்டின் பேரில் நடத்தப்பட்ட போது 12ம் இடததில் இருந்து எட்டாம் இலக்கத்துக்கு இந்தியா வீழ்ச்சி கண்டிருந்ததாகவும் அதன் பின்னர் டிஜிட்டல் பண கொடுக்கல் வாங்கலில் புழக்கம் படிப்படியாக அதிகரித்துச் சென்றதாகவும் இந்திய ரிசர்வ் வங்கி மேலும் தெரிவித்துள்ளது. 2020ம் ஆண்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சியை எடை போடுவதற்காக 21 நாடுகளில் இக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆசிய மற்றும் பிரிக்ஸ் நாடுகளின் டிஜிட்டர் பண பரிமாற்ற அலகுகளோடு ஒப்பிட்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பிலேயே இந்தியா வேகமான வளர்ச்சியைக் காட்டியிருப்பது தெரியவந்தது. குறிப்பாக ரசீதுகளுக்கான கொடுப்பனவுகள், கிரடிட் கார்ட் பயன்பாடு என்பன அதிகரித்துச் சென்றதன் விளைவாகவே இந்தியா படிப்படியான முன்னேற்றத்தை அடைந்திருப்பதாக வங்கி மேலும் தன் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

எனினும் 2020இல் பொருளாதார வளர்ச்சி குன்றியதாகவும் கொவிட் தொற்று காரணமாகவும் டிஜிட்டல் பணப்பறிமாற்றம் குறைவடைந்து நாணயத்தாள் புழக்கம் அதிகரித்தது என்றும் வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

## பாக். உளவுத்துறை அரசியலில் இருந்து விலகி நிற்கும்படி இராணுவ தளபதி உத்தரவு

### இம்ரானின் அழுத்தமே காரணம் எனத் தெரிவிப்பு



பாகிஸ்தான் உளவுத்துறையினர் அரசியலில் ஈடுபடுவதை முற்றாக நிறுத்த வேண்டும் என உளவுத்துறை தலைமை உத்தரவிட்டுள்ளது. பாக். இராணுவத் தளபதி ஜெனரல் கமார் ஜாவதீ பஜ்வா இந்த உத்தரவை பிறப்பித்திருப்பதாகவும் இது முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இத் தகவலை தெஹ்ரீக் ஈ இன்சாப் கட்சியின் சிரேஷ்ட தலைவரான யஸ்மின் ரஷீட் வெளியிட்டிருப்பதோடு தமது கட்சிக்கு எதிரான வேலைகளில் பாக். உளவுத்துறையினர் லாகூருக்கான கமாண்டரான பிரிகேடியர் ரஷீத் ஈடுபட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியிருந்தார். இதையடுத்தே பாக். உளவுத்துறை அரசியலில் இருந்து ஒதுங்கி நிற்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பேரில் பதவியிழந்த இம்ரான்கான், தான் சதிமுயற்சி மூலமாகவே வெளியேற்றப்பட்டதாகவும் தான் சுதந்திரமான ஒரு வெளிநாட்டுக் கொள்கையை கடைபிடித்ததன் காரணமாகவே அமெரிக்க அனுசரணையுடன் பதவி கவிழ்ப்பு அரங்கேற்றப்பட்டதாவும் கூறி வருகிறார்.

இம் மாதம் 17ம் திகதி பஞ்சாப் மாநிலத்தில் இருபது தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் இம்ரானின் கட்சி அதிக ஆசனங்களைப் பெறுமானால் பஞ்சாப்பில் மாநில அரசை அக்கட்சியால் அமைக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக த எக்ஸ்பிரஸ் டிரிப்யூன் செய்தி வெளியிட்டுள்ளது.

பாக். இராணுவம் அந்நாட்டின் 73 வருட வரலாற்றில் அரைவாசி, காலப் பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. தொடர்ந்தும் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு கொள்கையில் அதன் ஆதிக்கம் தொடர்வதாகக் கூறப்படுகிறது.

## ஜப்பானிய முன்னாள் பிரதமர் சின்சோ அபே சுட்டுக்கொலை





ஜப்பான் முன்னாள் பிரதமர் சின்சோ அபே நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பிரசார நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

தெற்கு நகரான நாராவில் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த அபே மீது இரு தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அங்கேயே விழுந்த அவர் அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடத்திய 41 வயதான ஆடவர் சம்பவ இடத்தில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டார். டெட்சு யமகாமி என்ற அந்த ஆடவர் கடல்சார் பாதுகாப்புப் படையின் முன்னாள் உறுப்பினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா இந்தத் தாக்குதலை கண்டித்ததோடு, இது காட்டுமிராண்டித்தனமானது மற்றும் கொடிய செயல் என்று சாடியதோடு அமைதிகாக்கப்போவதில்லை என்றும் ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார்.

தற்சமயம் ஜப்பான் அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் நோபுவோ கிஷி, துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் உள்நோக்கம் எதுவாக இருந்தாலும், இந்தத் தாக்குதல் மன்னிக்க முடியாத செயல் என்று கூறினார்.

அபேவின் கழுத்தில் துப்பாக்கிக் காயம் ஏற்பட்டதாகவும் அவரது இடது பக்க மார்புப் பகுதியில் இரத்தப்போக்கு ஏற்பட்டதாகவும் தீயணைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் குறிப்பிட்டது.

கைத்துப்பாக்கிகள் தடை செய்யப்பட்டுள்ள ஜப்பானில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் அரிதான ஒன்றாக கருதப்படுகிறது.

3 முறை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவர் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு விழுந்ததாகவும் ஜப்பானியச் செய்தியாளர் ஒருவர் கூறினார்.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள், அந்த இடத்தில் இரத்தத்தைக் பார்த்ததாக கூறினர்.

ஜப்பானில் அதிக காலம் பிரதமராக இருந்தவராக அபே பதிவாகியுள்ளார். முதலில் 2006இல் ஓராண்டு காலமும், பின்னர் 2012 முதல் 2020 வரையிலும் அவர் பிரதமர் பொறுப்பை வகித்துள்ளார். 2020 இல் சுகாதாரக் காரணங்களுக்காக 67 வயதான அபே பிரதமர் பதவியில் இருந்து வெளியேறினார்.

தீவிர பழமைவாத மற்றும் தேசியவாதியாக அறியப்படும் அபே, தனது தனித்துவமான 'அபெனோமிக்ஸ்' என்று அழைக்கப்படும் ஆக்ரோஷமான பொருளாதாரக் கொள்கையுடன் வளர்ச்சியைத் தூண்டுவதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வந்துள்ளார்.

அவர் பதவியில் இருந்த காலத்தில் ஜப்பானின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு கொள்கைகளிவும் அதிரடி மாற்றங்களை கொண்டு வந்தார். குறிப்பாக ஜப்பானின் போருக்குப் பின்னரான அமைதி சார்புடைய அரசிலமைப்பிலும் திருத்தங்களை கொண்டுவந்தார்.

## இரட்டை குழந்தைக்கு தந்தையானார் மஸ்க்



உலகின் பெரும் செல்வந்தரான எலோன் மஸ்க் தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஷிவோன் சிலிஸ் என்ற பெண் அதிகாரியுடன் உறவில் இருந்து இரட்டை குழந்தைகளுக்கு தந்தையாகி உள்ளார்.

கடந்த 2021 கடைசிப் பகுதியிலேயே இந்த இரட்டை குழந்தை பிறந்துள்ளதை மஸ்க் உறுதி செய்தார்.

அவருடைய முதல் மனைவியான கனடாவை சேர்ந்த எழுத்தாளர் ஜஸ்டின் வில்சன், மஸ்க்கின் மூலம் ஐந்து குழந்தைகளை பெற்றுள்ளார். பின்னர் கனடாவை சேர்ந்த பாடகி கிரிமிஸ் மூலம் இரு குழந்தைகளை பெற்றுள்ளார்.

இது குறித்து பலர் அவரிடம் சமூகவலைத்தளங்கள் வாயிலாக பல கேள்விகளை எழுப்பி வந்தனர்.

இந்த நிலையில் அந்த கேள்விகளுக்கு பதில் அளிக்கும் விதமாக மஸ்க் ட்விட்டரில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.

அதில், "குறைந்த மக்கள் தொகை நெருக்கடிக்கு உதவ என்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறேன். பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைவது நாகரிகம் இதுவரை எதிர்கொள்ளாத மிகப் பெரிய ஆபத்து" என தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இவர் சீனாவின் மக்கள்தொகை வீழ்ச்சி குறித்து எச்சரித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனின் புதிய பிரதமர் பதவிக்கு போட்டி வலுக்கிறது



பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகிய நிலையில் புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான போட்டி வலுத்துள்ளது.

இதில் சட்டமா அதிபர் சுவெல்லா பிரேவமான் மற்றும் ஸ்டீவ் பேக்கரை தொடர்ந்து அந்தப் பதவிக்கான போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் டொம் டெஜன்டட்டும் குதித்துள்ளார்.

தம்மைத் தொடர்ந்து புதிய தலைவர் தேர்வு செய்யப்படும் வரை பிரதமர் பதவியில் நீடிக்கப்போவதாக ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார்.

என்றாலும் அவர் உடன் பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று சக கட்சியைச் சேர்ந்த பலர் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

பொரிஸ் ஜோன்சனின் அரசாங்கம் அண்மைய மாதங்களில் தொடர்ச்சியான சர்ச்சைகளில் சிக்கி வருகிறது. அது அவரது சொந்த கட்சி எம்.பிக்கள் சிலரை, பிரதமரின் இராஜினாமாவைக் கோரத் தூண்டியது.

இந்நிலையில் ஆளும் கட்சியின் தலைவரை தேர்வு செய்வதற்காக கால அட்டவணை அடுத்த வாரம் உறுதி செய்யப்படவுள்ளது. புதிய பிரதமர் வரும் செப்டெம்பரில் பதவி ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வாழ்க்கைச் செலவு நெருக்கடி:


## உலகில் 71 மில். மக்கள் பாதிப்பு



உலகில் வாழ்க்கைச் செலவினம் தொடர்பான நெருக்கடி நிலவிவருகிறது. அதனால் வறுமையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள உலக நாடுகளில் கூடுதலாக 71 மில்லியன் மக்கள் வறுமையின் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதாக 'யு.என்.டி.பி' எனப்படும் ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் மேம்பாட்டுத் திட்டம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டோருக்கு உகந்த வகையில் உதவித் திட்டங்களை வரைய வேண்டும் என்று 'யு.என்.டி.பி' குறிப்பிட்டது. இதன் தொடர்பில் பாதிப்புக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம் உள்ளவர்களுக்கு ரொக்கமாக நிதியுதவி வழங்குமாறும் வசதி உள்ள நாடுகளைக் கைகொடுக்குமாறும் அமைப்பு கேட்டுக்கொண்டது.

## 80 சீன நிறுவனங்களின் திட்டம்: இந்தியா ஒப்புதல்



ஜூன் 29 ஆம் திகதிய நிலவரப்படி, சீன நிறுவனங்களுடன் தொடர்புடைய 80 வெளிநாட்டு நேரடி முதலீட்டு திட்டங்களுக்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது தகவல் அறியும் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

இந்தியா தன்னுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளின் முதலீடுகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்ததில் இருந்து, அரசாங்கம் சீனாவிடம் இருந்து 382 திட்டங்களைப் பரிசீலிக்கப் பெற்றிப்பதாக தொழில் துறை மற்றும் உள்ளக வர்த்தக ஊக்குவிப்புக்கான திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.இதில் எத்தனை திட்டங்கள் நிராகரிக்கப்பட்டன என்பது தெளிவின்றி உள்ளது.

## விமான தாங்கிக் கப்பலுக்கு விமானம் வாங்கும் இந்தியா



இந்திய கடற்படை அதன் உள்நாட்டு விமானம் தாங்கி கப்பலான விக்ராந்திற்காக, அவரசுகளுக்கு இடையிலான வழித்தடத்தின் கீழ் டெக் அடிப்படையிலான போர் விமானங்களை வாங்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக இந்த விவகாரம் தொடர்பில் தெரிந்த வட்டாரத்தில் இருந்து செய்தி வெளியாகியுள்ளது.

இந்த கொள்முதலுக்காக பிரான்ஸ் நிறுவனமான டயோல்ட் ஏவியேசன் மூலம் தயாரிக்கப்படும் ரபால் எம் மற்றும் போயிங்கின் எப்/ஏ18ஈ சுப்பர் ஹோர்னட் விமானங்களை கடற்படை தேர்வு செய்திருப்பதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

இந்த இரு விமானங்களும் கோவாவில் உள்ள கடற்படைத் தளம் ஒன்றில் தமது செயற்பாட்டு திறனை நிரூபித்திருப்பதோடு அதன் செயல்திறன் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை பெற கடற்படை தற்போது எதிர்பார்த்துள்ளது.

## சிரிய கிளர்ச்சியாளர் பகுதிக்கு நிவாரணம் செல்ல வழித்தடம்



சிரியாவில் கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக 6 மாதங்களுக்கு பாதுகாப்பு வழித்தடத்தை ஏற்படுத்தித் தர ரஷ்யா முன்வந்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா பாதுகாப்புச் சபையில், அயர்லாந்தும் நார்வேயும் கொண்டுவந்த வரைவுத் தீர்மானத்தில், கிளர்ச்சியாளர் பகுதிக்கு பாதுகாப்பு வழித்தடத்தை ஓர் ஆண்டுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அதனை ஓர் ஆண்டு என்பதற்குப் பதிலாக ஆறு மாதங்கள் என்று திருத்துமாறு ரஷ்யா பரிந்துரைத்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டில் மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் ஆரம்பமான சிரியா உள்நாட்டுப் போரில் பொதுமக்கள் 3 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். ரஷ்ய இராணுவ உதவியுடன் ஜனாதிபதி பஷர் அல் அஸாத் தலைமையிலான படை பெரும்பாலான பகுதிகளை கிளர்ச்சியாளர்களிடமிருந்தும் ஐ.எஸ். போன்ற குழுக்களிடம் இருந்தும் மீட்டது. எனினும், வடகிழக்கே இருக்கும் இத்லிப் பகுதி மட்டும் இன்னும் கிளர்ச்சியாளர்களிடம் எஞ்சியுள்ளது.

## மருத்துவர் தாக்கப்பட்டமைக்கு சுகாதாரத் துறையினர் எதிர்ப்பு



பாகிஸ்தான், சிந்து மாகாணத்தின் இஸ்லாம்கொட் உள்ளூராட்சி மன்றத்திற்கான வாக்களிப்பின் போது சிறுபான்மை மருத்துவர் ஒருவர் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மருத்துவர்கள், துணை மருந்தாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலின் போது வாக்குச்சாவடி ஒன்றில் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றிய டொக்டர் கன்ஷாம் தாஸை பாகிஸ்தான் மக்கள் கட்சியின் பிரதேச தலைவர் குலாம் முகமது ஜுனேஜோ பகிரங்கமாக அவமானப்படுத்தி துன்புறுத்தியுள்ளார்.

இது தொடர்பான காணொளியும் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள சிறுபான்மையினர் உரிமைகளுக்கான தனிநபர் ஆணைக்குழுவின் கவனத்திற்கும் இச்சம்பவம் கொண்டு செல்லப்பட்டுள்ளதோடு அது தொடர்பில் விரிவான அறிக்கையை ஆணையாளர் நாயகம் கோரியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

## பாக். பிரதமருக்கு நீதிமன்றம் உத்தரவு



இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் இடம்பெறும் காணாமல்போன ஆட்கள் தொடர்பான வழக்கு வரும் செப்டெம்பர் 9 ஆம் திகதி விசாரணைக்கு வரும்போதும் அவர்களை முன்னிலைப்படுத்தும்படி பாகிஸ்தான் பிரதமர் செஹ்பாஸ் ஷரீபுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் பிரதமர் நேரடியாக ஆஜராகி விளக்கம் அளிக்கும்படியும் கூறப்பட்டுள்ளது.

காணாமல்போயுள்ள ஊடகவியலாளர் முதஸ்ஸர் மஹ்மூத் மற்றும் மேலும் ஐவர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோதே இஸ்லாமாபாத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அதார் மினல்லா இந்த உத்தரவை பிறப்பித்தார்.

கட்டாயமாக காணாமலாக்கப்படுவோர் சம்பவங்கள் பலொகிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்வா மாகாணங்களில் அதிகமான பதிவாகி வருகின்றன.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூலை 9 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්




தொழுகை நேரம்

07 முதல் 10 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.37 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.44 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.48 |

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆனி 25

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: ஏகாதசி

இராசி பலன்கள்

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | செலவு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | சுகம் |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | முயற்சி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

### ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யும்

# இலங்கையின் முயற்சிக்கு அமெரிக்கா தடையில்லை

## அமெரிக்க தூதுவர் ஜூலிசங் தெரிவிக்கிறார்



**ரஷ்ய வங்கிகள் மற்றும் தளபாடங்கள், போக்குவரத்து நிதி என்பவற்றுக்கு உலக நாடுகள் பலவற்றிலும் தடை இருப்பதால் அவதானம் தேவை**

எண்ணெய் இறக்குமதி செய்யும் மூன்றாவது நாடுகளுக்கு எதிராக அமெரிக்காவுக்கு தடைகள் இல்லை. நாங்கள் அமெரிக்காவிற்கு ரஷ்ய எண்ணெயை அனுமதித்துள்ளோம், ஆனால் அதுவும் ஏற்கனவே அமெரிக்காவில் உற்பத்தி திறன் மற்றும் ஆற்றல் திறன் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால் தான். எனவே, அமெரிக்காவின் மூன்றாவது நாடு தடைகள் எதுவும் இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் கூறியுள்ளார்.

எரிபொருளின் தேவை இருப்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளதாகவும், இந்த நேரத்தில் எரிபொருளைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் எந்த ஆதாரங்களுக்கும் செல்லும் என்றும் அவர் கூறினார். 06

**ரஷ்யாவை நம்பகரமான ஜனநாயக பங்காளியாக கருதி செயற்படின், அது உண்மையில் இலங்கை மக்களுக்கு நன்மைகளை தரும் எனவும் தெரிவிப்பு –சமிந்த பெரேரா**

### ராமேசுவரத்தில் பதுங்கியிருந்த

## வவுனியாவைச் சேர்ந்த இரண்டு பேர் கைது

**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**



ராமேசுவரத்தில் பதுங்கியிருந்த 2 அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ராமேசுவரம் கடல் வழியாக இலங்கைக்கு தப்பிச்செல்ல 2 இலங்கை அகதிகள் ராமேசுவரத்தில் தலைமறைவாக இருப்பதாக கீழ்பெறி பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து ராமேசுவரம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அனைத்து தங்கும் விடுதிகளிலும், கீழ்ப்புற பொலிசார் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். இதில் செம்ம மடம் பகுதியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தின் தனி அறையில் 2 இலங்கை அகதிகள் பதுங்கி இருப்பதை பொலிசார் கண்டுபிடித்தனர். பின்னர் அவர்களை கைது செய்து தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். இதில் அவர்கள் விருதுநகர் மாவட்டம் குன்னூர் சந்தை இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வந்த யோகராஜ் மகன் புஷ்பராஜ் (வயது 42), இலங்கை வவுனியா பகுதியைச் சேர்ந்த உதயகுமார் மகன் மிதுலன் என்ற அருணன் என்பது தெரியவந்தது.

## சவூதி அரேபிய தூதரகத்தின் பொறுப்பாளருடன் GL சந்திப்பு

சவூதி அரேபியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அப்துல்லாஹ் ஏ.ஏ. ஓர்கோபி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை சந்தித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் இலங்கையின் அனைத்து துறைகளிலும் அதன் பாதகமான பாதிப்புக்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் விளக்கமளித்தார்.

இலங்கை சவூதி இருதரப்பு உறவுகளுக்கு 06

# வர்த்தகம், முதலீட்டு துறைகளுக்கு ஈரான் ஒத்துழைப்பு

### ஈரான் தூதுவர் தெரிவிப்பு



வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஈரானிய தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதே (Hashem Ashjazadeh) தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்று (08) பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த போதே தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு இணையாக எண்ணெய் பரிமாற்றத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இறுதிக்கட்டத்தில் உள்ள 120 மெகாவோட் திறன் கொண்ட உமாஓயா திட்டத்தின் நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி , ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்த வழங்கும் ஆதரவிற்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

# ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல்வாதியை இழந்துவிட்டது

### - ஜனாதிபதி கோட்டாபய

ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல்வாதியை இழந்துவிட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நேற்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாக ஜப்பானின் தேசிய ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ,

“ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் துயர மரணம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல்வாதியை இழந்துவிட்டது.

அவரது குடும்பத்தினருக்கும், ஜப்பான் மக்களுக்கும் எனது இதயப் பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என பதிவிட்டுள்ளார்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதியத் திட்டம்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளோருக்கு விசேட ஓய்வூதியத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில வாரங்களில் இந்த புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் தயாரிப்பது தொடர்பில் வருடக் கணக்கில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் இனியும் தாமதமின்றி அந்தத் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தாம் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், மேற்படி விசேட ஓய்வூதியத் திட்டம் சமூக பாதுகாப்பு

# 2023 ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023ஆம் ஆண்டுக்கு அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதி எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் கல்வி அமைச்சுக்கு விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்கவே 2023 ஆம் ஆண்டுக்கு முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கு முதலாம் தரத்தில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டிருந்த நிலையில் அதற்கான முடிவுத் திகதி ஜூலை 15 என கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

தற்போது அந்த கால எல்லையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு புதிய திகதியாக எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி கல்வியமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொல்லியல் அம்சங்களை பார்வையிட்ட இந்திய தூதுவர்

### யாழ்.கோட்டையில் நுணுக்கமாக ஆராய்வு

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண கோட்டையில் உள்ள தொல்லியல் அம்சங்களை பார்வையிட்டதுடன் அது தொடர்பான விடயங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

நேற்று முன்தினம் (7) யாழ்ப்பாண கோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விருந்தினராக பங்கேற்க வந்தபோதே அதன் கட்டுமான நுட்பங்கள், சிறப்பம்சம் மற்றும் தொல்லியல் விடயங்கள் பற்றி தொல்லியல் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

# எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தியுள்ள IOC



### திங்கள் முதலே வழமை நிலைக்கு வரும்

தற்போதைய நிலைமைமைக்கு மத்தியில், லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எதிர்வரும் திங்கட்கிழமை வரையில், எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தியுள்ளது.

கைத்தொழில் துறைக்கு மாத்திரம் தற்போது எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுவதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

தமது நிறுவனத்திற்கு உட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமைப்போல் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாக ஐ.ஓ.சியின் முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவித்துள்ளார் .

### வீட்டையும் ஆகாயத்தை நோக்கி 03 தடவைகள்

# துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பியோடிய லலித் MP

### சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் வர்ணகுமார நேற்று முன்தினம் (07) காலை ஹொரணை தொம்பகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நடந்த உற்சவத்தில் வான் நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனக்கு கிடைத்த அழைப்பின் பேரில், உயிரிழந்த படை வீரர் ஒருவரின் அஞ்சலி நிகழ்வுக்கு 06

### கடந்த 2 வருடம் வீதி அபிவிருத்திக்காக

# 44,300 கோடி செலவிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிக்கை

கடந்த இரண்டு வருடங்களில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக மாத்திரம் செலவிடப்பட்ட தொகை நாற்பத்து நான்காயிரத்து முந்நூறு கோடி ரூபா என நிதியமைச்சு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரியவந்துள்ளது.

2021ஆம் ஆண்டு அதற்கான செலவு இருபத்தொராயிரத்து முந்நூறு கோடி ரூபாவாகவும், 2020ஆம் ஆண்டில் இருபத்து மூவாயிரம் கோடி ரூபாவாகவும் செலவாகியுள்ளது.

கடந்த ஆண்டு, ஒருங்கிணைந்த வீதி மேம்பாட்டுத் திட்டத்துக்காக நான்காயிரத்து எண்ணூற்று நாற்பது கோடி ரூபாவும், பிரதான வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகளை அணுகுவதற்கும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மாற்று வீதி அமைப்பதற்கும் நான்காயிரத்து எண்ணூற்று இருபத்தி ஆறு கோடி ரூபா செலவிடப்பட்டது.

மேலும், மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்காக முந்நூற்று ஐம்பத்தைந்து கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்காக செலவிடப்பட்ட தொகை ஆயிரத்து முந்நூற்று முப்பத்திரண்டு கோடி ரூபாவாகும்.

கொழும்பின் வெளிவட்ட வீதிக்கு நூற்றியாறு கோடி ரூபாவும், கோபுரங்கள் மீது உத்தேச துறைமுக நுழைவு வீதிக்கு நானூற்றி ஐம்பத்தைந்து கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா ஓமந்தை எரிபொருள் நிலையத்திற்கருகில் வாள்களுடன் மூவர் கைது



**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில் வாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளினை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் வீதியிலே பல நாட்களாக காத்திருக்கின்றனர்.

இந் நிலையில் இளைஞர் குழுவினர் ஒன்றிணைந்து புதிதாக ஒரு புதிய வரிசையினை ஏற்படுத்தியதுடன், நேற்று எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட போது தங்களது வரிசையினருக்கே எரிபொருளினை வழங்க வேண்டும் என தெரிவித்து சண்டையில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் நிலைமையினை கட்டுக்குள் கொண்டு வந்திருந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்துள்ளதுடன், காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் பொல்லுகளினை மீட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 25ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை

பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்ல வேண்டும், அப்பகைவர்க்கு முடிவு காலம் வந்த போது அவருடைய தலை கீழே விழும்.

# எரிபொருளுக்கான மாற்றுவழிகளை நாட வேண்டிய நிலையில் உலகம்!

நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினை எரிபொருள் பற்றாக்குறை ஆகும். எரிபொருட்களுக்கு பல மடங்கு விலை அதிகரித்திருப்பதானது மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பார்க்கிலும், எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே பெரும் பாதிப்பையும் ஒருவித பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சமையல் எரிவாயுப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு மக்கள் ஒருவாறு தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். மின்சார அடுப்பு, விறகுப் பாவனை மற்றும் சிரட்டைக்கரி அடுப்பு என்றெல்லாம் மக்கள் ஒருவாறு உணவு சமைப்பதற்கு மாற்றுவழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டனர். நகரங்களில் வாழ்கின்ற மக்கள் மாத்திரமே சமையல் எரிவாயுத் தட்டுப்பாட்டினால் திண்டாடி வருகின்றனர்.

ஆனால் பெற்றோல், டீசல் போன்ற திரவ எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைச் சமாளிப்பதுதான் இயலாத காரியமாக உள்ளது. ஏனெனில் இவையிரண்டும் போக்குவரத்துக்குத் தேவையான எரிபொருட்கள் ஆகும். டீசலும், பெற்றோலும் கிடைக்காது போனால் நாட்டின் போக்குவரத்து முற்றாகவே ஸ்தம்பிதமடைந்து விடும். மக்கள் தங்களது வீட்டினுள்ளேயே முடங்கிப் போகின்ற பரிதாபம் ஏற்பட்டு விடும்.

அது மாத்திரமன்றி டீசல், பெற்றோல் ஆகியவற்றிலேயே ஏராளமான மக்களின் அன்றாடத் தொழிலும் தங்கியிருக்கின்றன. இவையிரண்டும் இல்லாததால் பெருமளவானோரின் அன்றாட தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டு அவர்களது ஜீவாதாரமே கேள்விக்குறியாகி உள்ளது. அத்தகையோரே வேறு வழியின்றி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரவுபகலாக இப்போது நீண்ட கியூவரிசையில் காத்துக் கிடக்கின்றனர்.

மனிதனின் அன்றாட வாழ்வில் போக்குவரத்து என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. அதேசமயம் பொதுப்போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்துவதென்பது எல்லோருக்கும் சாத்தியமானதும் அல்ல. ரயில்களும் பேருந்துகளும் நாட்டின் அனைத்துக் கிராமங்களுக்கும் செல்வதில்லை. எனவே அங்கு வாழ்கின்ற மக்கள் போக்குவரத்துக்காக மாற்றுவழிகளையே கையாள வேண்டியுள்ளது. அவ்வாறானவர்கள் மோட்டார் சைக்கிள்களையோ அல்லது முச்சக்கரவண்டிகளையோதான் பயன்படுத்த வேண்டியுள்ளது.

அக்காலத்தில் எமது நாட்டில் குறுந்தூரப் பயணங்களுக்கு துவிச்சக்கரவண்டிகளே கைகொடுத்தன. நாற்பது கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இடத்துக்குக் கூட அநாயாசமாக பயணம் செய்வதற்கு துவிச்சக்கரவண்டிகள் உதவின. மாணவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரதும் இலகு பயணத்துக்கான சாதனமாக துவிச்சக்கரவண்டி விளங்கியது.

ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் கூட துவிச்சக்கரவண்டிகளில் இலகுவாகப் பயணம் செய்தனர். எவரும் வாங்கக் கூடிய மலிவான போக்குவரத்து சாதனமாக அது விளங்கியது. பராமரிப்புச் செலவும் குறைவு. எரிபொருள் அவசியமில்லாததால் சூழல் மாசடைவதும் இல்லை. அன்றைய காலத்தில் மக்களின் நண்பனாகவே துவிச்சக்கரவண்டி விளங்கியது.

காலப்போக்கில் எல்லாமே மாற்றம் அடைந்தன. துவிச்சக்கரவண்டிகளை வைத்திருந்தோர் மோட்டார் சைக்கிளுக்கு மாறத் தொடங்கினர். மோட்டார் சைக்கிள் வைத்திருந்த ஒருசிலர் கார் வாங்கிக் கொண்டனர். நவீனத்தின் கொடுமையினால் துவிச்சக்கரவண்டிகள் மூலைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டன.

துவிச்சக்கரவண்டிகளில் சவாரி செய்வதன் மூலம் மனிதனுக்குக் கிடைத்து வந்த உடற்பயிற்சியும் இல்லாமல் போனது. தொற்றாவியாதிகள் மனிதனை ஆக்கிரமித்துக் கொண்டன. ஈருருளியில் பயணம் செய்பவர்களை தரக்குறைவாகவும், கேலியாகவும் பார்க்கும் நிலைமையும் உருவாகியது. உலகில் பெற்றோலிய வளமானது என்றோவொரு நாள் முடிவுக்கு வரத்தான் போகின்றதென்ற உண்மையை மனித இனம் புரிந்து கொள்ளவே இல்லை.

காலச்சக்கரத்தில் நாம் மீண்டும் பழைய இடத்துக்கே வந்து நிற்கின்றோம். எரிபொருள் பற்றாக்குறை தற்போது எமது நாட்டில் மாத்திரம் ஏற்படவில்லை. உலகெங்கும் இன்று இதே பிரச்சினைதான். எமது அயல்நாடான இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் எரிபொருள் பற்றாக்குறையினால் திண்டாடுகின்றன. பூமியின் உள்ளே உள்ள சொற்ப எரிபொருள் வளத்தை எத்தனை காலத்துக்குத்தான் மனிதனால் அகழ்ந்தெடுத்துக் கொண்டிருக்க முடியும்? அதற்கும் ஒரு முடிவு வரத்தானே வேண்டும்.

மூலையில் கிடந்த துவிச்சக்கரவண்டிகள் இன்று மீண்டும் கம்பீரத்துடன் வீதிக்கு வந்து விட்டன. 'எதிர் வரும் காலத்தில் மக்களுக்கு கைகொடுக்கப் போவது நான்தான்' என்று அவை மிடுக்குடன் கூறுவது போல் ஒரு பிரமை எமக்கு ஏற்படுகின்றது. கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களில் இப்போது பைசிக்கிளின் நடமாட்டம் அதிகரித்து விட்டது. அனைத்து மட்டத்தினரும் அதில் பயணம் செய்யத் தொடங்கி விட்டனர்.

சமையல் எரிவாயுவின் சரித்திரமும் அவ்வாறானதுதான். விறகு மூலம் கிராமங்களில் சமைத்துக் கொண்டிருந்த மக்கள் வலிந்து போய் எரிவாயு பாவனைக்குள் தள்ளப்பட்டனர். நகர மக்களின் நிலைமை வேறு. ஆனால் கிராமத்து மக்களுக்கு எரிவாயு அவசியமேயில்லை. அது மக்களுக்கு சொகுசுத்தன்மையை படிக்கடியாகவே ஏற்படுத்தி விட்டது. அதன் முடிவு இன்று தெரிகின்றது. மக்கள் மீண்டும் விறகு, சிரட்டைக்கரி போன்றவற்றின் பாவனைக்குச் செல்கின்றனர்.

இவையெல்லாம் எமக்கு ஒன்றை மட்டும் உணர்த்துகின்றன. புவியின் இயற்கை வளமானது அள்ள அள்ளக் குறைவதில்லையென்ற அசட்டுத்தனமான நம்பிக்கையில் நாம் எப்போதும் இருந்து விடுவது மடைமை. எமது பாரம்பரியத்துக்கு நாம் மீண்டும் திரும்பவே வேண்டியுள்ளது.

editor.tkn@lakehouse.lk

# ஜப்பானிய முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணி!

## பட்டப்பகலில் ரயில் நிலையம் அருகே இடம்பெற்ற துணிகர சம்பவம்; கைது செய்யப்பட்ட கொலையாளியான முன்னாள் கடற்படை வீரர் கூறுகின்ற காரணம்!

நேற்றுக் காலை ஜப்பானில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே பலியானார். ஷின்சோ அபேவை சுட்டதாக கருதப்படும் 41 வயது நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

ஜப்பானில் உள்ள நாரா பகுதியில் வைத்தே ஷின்சோ அபே நேற்று துப்பாக்கியால் சுடப்பட்டார். அவர் நாரா என்ற மேற்கு ஜப்பான் பகுதியில் ரயில் நிலையம் ஒன்றுக்கு அருகே மக்கள் முன் உரையாடிக் கொண்டு இருந்தார். தேர்தல் பிரச்சாரத்திற்காக பேசிக் கொண்டு இருந்தவர் மீது யமகாமி என்ற 41 வயது நபர் துப்பாக்கியால் சுட்டார். பின்னால் இருந்து 2 முறை ஷின்சோ அபேவை அந்த நபர் சுட்டுள்ளார்.

முதலில் அங்கு துப்பாக்கிச் சூடு சத்தம் மட்டுமே கேட்டுள்ளது. சத்தத்தை தொடர்ந்து அடுத்த வினாடி உடல் முழுக்க இரத்தத்தோடு அபே சுருண்டு விழுந்துள்ளார். அதன்பின்தான் ஷின்சோ அபேவின் பாதுகாவலர்களுக்கு அவர் சுடப்பட்டதே தெரிய வந்துள்ளது. துப்பாக்கியால் சுடப்பட்ட ஷின் சோ அபே இரத்தம் வெளியேறி, சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்தார்.

அவரின் நெஞ்சுப் பகுதியில் துப்பாக்கியால் இரண்டு முறை சுடப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து ஷின் சோ அபே உடனே அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு நெஞ்சு வழியாக குண்டு பாய்ந்த காரணத்தால், மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அத்தோடு உடலில் உடனே நாடித் துடிப்பும் நின்றுள்ளது. ஷின்சோ அபேவை துப்பாக்கியால் சுட்டதாக கருதப்படும் நபரை பொலிசார் தீவிரமாக விசாரித்து வருகிறார்கள்.

இந்த துப்பாக்கி சூட்டிக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. அவருக்கு 6 மணி நேரமாக தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை எதுவும் பலன் அளிக்கவில்லை. இரண்டு குண்டுகள் அவர் நெஞ்சு வழியாக சென்ற நிலையில், அவர் உயிர் பிரிந்து விட்டதாக மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. இவருக்கு 67 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த துப்பாக்கிச் சூடு ஏன் நடத்தப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. ஜப்பானில் பிரதமராக இருந்தவர்களில் அபே மிக முக்கியமான தலைவர். அதிக மக்கள் ஆதரவு கொண்ட லிபரல் கட்சி தலைவர் இவர். ஜப்பான் பிரதமராக இருந்த ஷின்ஷோ அபே தனது பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக 2020 இல் அறிவித்துள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக மூன்று முறை இவர் பிரதமர் பதவியை அலங்கரித்து வந்தார். மொத்தமாக ஜப்பானின் பிரதமராக இவர் 4 முறை இருந்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு திடீரென "எனக்கு உடல்நிலை சரியில்லை. இனிமேலும் அரசு ரீதியான பணிகளை கவனிக்க முடியாது. அதனால் நான் பதவி விலகுகிறேன்" என்று ஷின்ஷோ அபே அறிவித்தார். இதற்கு முன் ஏற்கனவே 2006 இல் இவர் தனது பிரதமர் பதவியில் இருந்துஇராஜினாமா செய்தார். 2005 இல் பிரதமராக பதவி ஏற்றார். அதன்பின் சரியாக ஒரே வருடத்தில் அந்தப் பதவியில் இருந்து இராஜினமா செய்தார். இவர் மீண்டும் பரபரப்பான அரசியலுக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில்தான் தற்போது துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

ஜப்பான் பிரதமர் ஷின் சோ அபேவை சுட்டுக் கொலை செய்த நபர் குறித்து சில கூடுதல் தகவல்கள் வெளியாகி உள்ளன.

டெட்சுயா யமகாமி என்பதே கொலையாளியின் பெயர். முன்னாள் பிரதமர் நேற்று ஜப்பான் நாட்டின் நாரா பகுதியில் உள்ள ரயில் நிலையம் அருகே மக்களிடையே பிரசாரக் கூட்டத்தில் பேசினார். அந்தச் சமயத்தில் பின்னால் நபர் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிகிறது. இதனால் ஷின் சோ அபே, அங்கு திடீரென சுருண்டு விழுந்தார்.



மிக மோசமாகக் காயம் அடைந்த அவர், ஹெலிகொப்டர் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு உயிருக்கு மோசமான நிலையில், அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அபே இக்கட்டான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவரை காக்க மருத்துவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும் ஜப்பான் பிரதமர் ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா குறிப்பிட்டிருந்தார். ஆனால் சிகிச்சை பலனில்லாமல் அவர் உயிரிழந்தார்.

41 வயதான டெட்சுயா யமகாமி என்பவரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். அபேவை சுட்டுவிட்டு அங்கிருந்த தப்பித்து ஓட முயன்றவரைப் பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்துப் பிடித்தனர். அவர் அபேவை கொல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளார். இதற்காக அவரே சொந்தமாகத் துப்பாக்கி போன்ற ஒன்றையும் தயார் செய்துள்ளார். இந் நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்திய டெட்சுயா யமகாமி நாரா பகுதியில் வசித்து வருவர். இவர் ஜப்பானியக் கடற்படை என்றும் அழைக்கப்படும் ஜப்பானிய கடல் சார் தற்காப்புப் படையின் முன்னாள் வீரர் ஆவார்.



துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீதியில் வீழ்ந்து கிடக்கும் ஜப்பானிய முன்னாள் பிரதமர்

ஷின் சோ அபே பிரதமராக இருந்த சமயத்தில், அவரது நடவடிக்கையால் பாதிக்கப்பட்டதாகவும் இதன் காரணமாகவே அவரை கொலை செய்யும் நோக்கத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் அவர் ஒப்புக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அபேவை கொல்ல வேண்டும் என்பதற்காக வீட்டிலேயே இவர் துப்பாக்கியை வடிவமைத்து உள்ளார்.

ஷின்சோ அபே சுடப்படும் முன்னர் அங்கு எடுக்கப்பட்ட வீடியோவும் இணையத்தில் வெளியாகி உள்ளது. அதில் டெட்சுயா யமகாமி கறுப்பு பையுடன் கண்ணாடி அணிந்து கொண்டு, சாம்பல் நிற டீசர்ட் போட்டுக் கொண்டு நிற்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும், துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னர் அவர் அங்கிருந்து தப்பி ஓட முயன்றார். இருப்பினும், பாதுகாப்புப் படையினர் அவரை சுற்றி வளைத்து கைது செய்தமை வீடியோவில் பதிவாகியுள்ளது.



பாதுகாவலர்களால் கொலையாளி மடக்கிப் பிடிக்கப்படுகின்றார்

# வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள 95 வீத நிலப்பரப்பு

வடக்கு, கிழக்கு பகுதிகளில் 95% ஆன நிலப் பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக தேசிய கண்ணிவெடிகள் தொடர்பான செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இன்னும் 14 சதுர கிலோ மீற்றர் நிலப் பகுதி மாத்திரமே மீதமாக இருக்கிறது. 2028 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை நிலக்கண்ணிவெடி அற்ற நாடாக மாற்றுவது அரசாங்கத்தின் இலக்காகும்.

இலங்கையில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றுவது சம்பந்தமாக தெளிவூட்டுவதற்கான நிகழ்வு ஒன்றில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. குறித்த நிகழ்வு கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணியை துரிதப்படுத்தி இலங்கையை கண்ணிவெடிகள்.அற்ற நாடாக விரைவில் மாற்றும் வகையில் தற்போது பெறப்படும் உதவித் தொகையை 21 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கான மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்காக இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு ஜெனீவாவில் உள்ள சர்வதேச நிலக் கண்ணிவெடிகள் அகற்றுவதற்கான நிலையம் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகின்றது.



யுத்தம் நிலவிய காலப் பகுதிகளில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலக்கண்ணிவெடிகள் பரவலாக புதைக்கப்பட்டிருந்ததோடு, 2009 ஆம் அண்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அந்த நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது அது தேசிய நிலக்கண்ணிவெடிகள் தொடர்பான செயற்பாட்டு மத்திய நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அந்த மத்திய நிலையம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் விடயப் பரப்புக்குள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நிலக்கண்ணிவெடி அகற்றப்படும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற எல்லா அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் இந்த மத்திய நிலையத்தில் இருந்து செய்யப்படுகின்றது.

இலங்கையில் நிலக் கண்ணிவெடி அகற்றும் செயற்திட்டத்திற்காக இலங்கை இராணுவம் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றது. அதற்கு மேலதிகமாக மெக் நிறுவனம், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம், டேஸ் நிறுவனம் மற்றும் ஷாப் நிறுவனம் ஆகிய சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் நான்கும் அதற்கான பங்களிப்பை வழங்குகின்றன.

வருடாந்தம் 17 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகை கிடைக்கிறது. நிலக் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற 300 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. இந்த செயற்பாட்டிலே முழுமையாகத் தங்கி வாழ்கின்ற 12000 பேருக்கு மேற்பட்டவர்கள் இருக்கின்றார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலக்கண்ணிவெடிகள் தடை செய்யும் உடன்பாட்டில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது. அதன்படி அதனை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் 2022 பெப்ரவரி 17 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தால் அது குறித்த சட்ட மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

இந்தச் செயலமர்வுக்கு தேசிய நிலக்கண்ணிவெடிகள் பற்றிய செயற்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தன, அந்த நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் வீ. பிரேமசந்திரன் மற்றும் பெருமளவிலான இராணுவ அதிகாரிகள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முனீரா அபூபக்கர்...

# 'டோக்கன்' மாத்திரம் வழங்குவதால் மக்களின் தேவை பூர்த்தியாகி விடுமா?

## ஆலையடிவேம்பு மக்களின் ஆதங்கம்

இராப்பகலாக காத்திருந்து பெற்றுக் கொண்ட பெற்றோலுக்கான டோக்கன் கூட பயனற்று போனதாக என அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் அங்கலாய்கின்றனர்.

15 நாட்களாக பெற்றோல் வழங்கப்படாமை காரணமாக கவலை அடைந்துள்ள ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் 5 தினங்களாக தொடர்ச்சியாக இராப்பகலாக வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி காத்திருந்தனர். இந்நிலையில் இராணுவத்தினரின் உதவியுடன் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் இணைந்து 'டோக்கன்' வழங்க ஆரம்பித்தனர்.

காலை 9 மணியளவில் ஆரம்பித்த 'டோக்கன்' வழங்கும் பணி இரவு 09 மணிவரை தொடர்ந்தது. ஆனாலும் இலக்கமிடப்பட்ட ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சுமார் 500 பேருக்கு மாத்திரம் டோக்கன் வழங்கப்பட்டது.

மிகுதியான இலக்கமிடப்பட்ட 300 மோட்டார் சைக்கிள்களுக்கு, வருகை தந்ததை உறுதிப்படுத்தி துண்டுகளும் வழங்கி வைக்கப்பட்டன. இலக்கமிடப்படாத 500 இற்கும் மேற்பட்டவர்களும் திருப்பி அனுப்பி வைக்கப் பட்டனர்.



இந்நிலையில் மீண்டும் காலை முதல் மீண்டும் டோக்கன் வழங்கும் பணி இடம்பெற்றது. ஆனாலும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னரே நாட்டிற்கு எரிபொருள் கொண்டுவரப்படும் எனும் செய்தியால் பெரும் கவலை அடைந்துள்ள பொதுமக்கள் தங்களை எரிபொருள் நிலையத்திலிருந்து அகற்ற எடுக்கும் செயற்பாடே 'டோக்கன்' வழங்கும் திட்டம் எனவும் கூறுகின்றனர்.

அப்படி பெற்றுக் கொண்ட டோக்கன் பயனளிக்குமா? அல்லது பயனற்றுப்பேகுமா? எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வாச்சிக்குடா விஷேட நிருபர்

# வரலாற்றில் முதல் தடவையாக கல்லடி இராமகிருஷ்ணமிஷனை தரிசித்துச் சென்ற யாழ்–கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவினர்



**வரலாற்றில் முதல் தடவையாக யாழ். கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் சில தினங்களுக்கு முன்னர் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.**

கடந்த மாதம் நான்காம் திகதி யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து சிங்கராஜா ஜெயராஜா தலைமையிலே ஆரம்பமான பாதயாத்திரை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு ஒரு மாத காலத்தை பூர்த்தி செய்து தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

குழுவினர் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் மட்டக்களப்பு காரைதீவு ஒன்றியத்தின் காலை போசனத்துடன் , புறப்பட்டு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தை வந்தடைந்தார்கள்.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் ஆகியோர் விடுத்த அழைப்பை ஏற்று அங்கு அவர்கள் வருகை தந்தார்கள்.

மிசனுக்கான இவ்விஜயம் வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெறுவதால் முக்கியத்துவம் பெறுகிறது. யாழ். கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவினர் கல்லடி இ.கி.



மிஷனில் வரவேற்கப்பட்டு, அங்கு பகல் அவர்களுக்கு மதியபோசன விருந்து உபசாரம் வழங்கப்பட்டது.

முன்னதாக இராமகிருஷ்ண ஆலயத்தில் பஜனையும் விசேட பூஜையும் இடம்பெற்றன. இல்ல மாணவர்கள், பாதயாத்திரிகர்கள் இணைந்து சுவாமி நீலமாதவானந்தா ஜீ தலைமையில் ஒரு மணி நேரம் பஜனை செய்தனர்.

அச்சமயம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பட்டிப்பளை மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சிவஞானம் அகிலேஸ்வரன், உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

பாதயாத்திரிகர்கள் இ.கி.மி. விபுலானந்த மணிமண்டபத்தில் தங்கவைக்கப்பட்டனர். பிற்பகலில் அங்கு அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. வைத்திய நிபுணர் டொக்டர் சுந்தரேசன் தலைமையிலான குழுவினர் இம்மருத்துவ முகாமை நடத்தினர்.



முடிவில் பாதயாத்திரைக் குழுத்தலைவர் சி.ஜெயராசா தெரிவிக்கையில் "வரலாற்றில் முதல் தடவையாக மிஷனுக்கு செல்வது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எங்களில் 99 வீதமானவருக்கு மிஷன் பற்றித் தெரியாது. இங்கு வந்த பின்பே சுவாமிகளது அன்பான வரவேற்பையும் உபசரிப்பை யும் உணர முடிந்தது. குருகுல மாணவர்கள் நேரத்துக்கு ஒழுங்குடன் நடப்பதை அவதானிக்க முடிந்தது. அதுமட்டுமின்றி மருத்துவ முகாமையும் நடாத்தினர்.

எங்களை அன்புடன் அழைத்த சுவாமிகளுக்கு நன்றி கூறுகின்றோம். அதற்காக ஒருங்கிணைப்பைச் செய்த எமது ஆலோசகர் சகாதேவராஜா ஜயாவுக்கும் நன்றிகள். இன்னும் ஓரிரு தினங்களில் நாங்கள் அம்பாறை மாவட்டத்தை அடைவோம். 22 ஆம் திகதி உகந்தைமலை முருகன் அருகில் உள்ள காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் அதன் ஊடாக காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றோம். முருகன் அருளால் எதிர்வரும் 28 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைய இருக்கின்றோம்" என்றார்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# பெண்களை அடிமையென்று எண்ணுகின்ற மூடத்தனம் உலகிலிருந்து நீங்க வேண்டும்!

**இன்று உலகம் முழுவதும் பரவலாகப் பேசப்படும் கருப்பொருள் பெண் அடிமை, பெண் சுதந்திரம். இது ஏன் பேசப்படுகின்றது? இது இன்று தேவைதானா? என்ற கேள்வி பலர் மத்தியில் இருக்கின்றது.**

பெண் சுதந்திரம், பெண் விடுதலை என்ற சொல்லாடலை உடைத்தெறியும் கருவி மனித மனங்களிலேயே இருக்கின்றது. பண்பாடு கலாசாரம் என்ற போர்வையிலே அதீதமாகப் பெண்களைப் புகழ்வது போல் புகழ்ந்து அடிமைத்தனத்தை ஏற்படுத்துவது கண்கூடு.

என்ன வைத்திருக்கிறோமோ அது நாகரிகம், என்னவாக இருக்கிறோமோ அது பண்பாடு. எம்முடைய நாகரிகமும் பண்பாடும் உலகமயமாக்கலினால், கலந்துபட்டுக் கிடக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் பெண்மையை ஒரு போகப்பொருளாகக் காணும் ஆண்வர்க்கத்தின் மனநிலை மாற்றப்பட வேண்டியது அவசியம்.

மனிதஇனம் தோன்றி நாடோடியாகத் திரிந்து உணவுப் பொருள்களைச் சேகரித்த நிலையிலிருந்து மாறி உணவுப் பொருள்களை ஒரு இடத்திலே தங்கி உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பெண்களே நில வேளாண்மை நடத்தியவர்களாக காணப்பட்டனர். இதனாலேயே பூமியைப் பூமாதேவி என்று சொல்லும் வழக்கம் இருந்தது. பெண்களின் உடல் சார்ந்த வேதனைகள் காடு, மேடு சுற்றித் திரிவதற்கு இடையூறாக இருந்த காரணத்தினால், இயற்கை அவர்களுக்கு அளித்த வரத்தை உற்பத்திப் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தி நிலக்கிழார் ஆகினர்.

அக்காலகட்டத்தில் தாய்வழி சமுதாயமே இருந்தது. தாய்வழி சமுதாயத்திலே காதுகுத்தும் விழா, பூப்பு நீராட்டுவிழா, திருமணவிழா போன்ற விழாக்களில் தாய்மாமனுக்கே முதலுரிமை வழங்கப்பட்டது. தாய்ப் பெயரைப் பெண்களுக்கு முதல் பெயராக வைத்தல், தாய்த்தெய்வ வழிபாடு முதன்மையாகவும் காணப்பட்டன. அக்காலத்தில் ஆண்களின் ஆதிக்கம் முற்றாக இல்லாத காரணத்தினால், காதல் திருமணங்கள் சிறப்புற்று இருந்தன. அன்று தவமிருந்து பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த மரபினை

"குன்றக் குறவன் கடவுள் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்
ஆயரி நெடுங்கண் கலுழச்
சேயகால் தெய்ய நீ பிரியும் நாடே"என்ற ஐங்குறுநூற்றுப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது.

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த நிலைமை அக்காலத்தில் இருந்ததில்லை. ஆணுக்கு நிகராகப் பெண்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்று இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இதனை

"துணைப் புணர்ந்த மட மங்கையர்
பட்டு நீக்கித் துகில் உடுத்தும்,
மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்,
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்" என பட்டினப் பாலை சான்று பகர்கின்றது. திருமணம் செய்கின்ற போது மணமகன் மணமகளின் பெற்றோருக்கு முலைக்கூலி வழங்கியிருக்கிறார். அந்த அன்பளிப்பை வழங்கியமை அகநானூறு புறநானூறு ஆகிய பாடல்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

"முழங்கு கடல் முழவின் முசிறியன்ன




நலம்சால் விழுப் பொருள் பணிந்து கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலள் இவள் எனத்
தந்தையும் கொடா அன்"

இவ்வாறு மணமகளுக்கு பரிசுப் பொருள்கள் வழங்க முடியாத மணமகன் அவர்களுடைய வீட்டிலே இருந்து தொண்டு செய்து தான் கொடுக்க வேண்டியதை தொண்டின் மூலம் ஈடு செய்வதுண்டு. இம்முறை ஆரிய வருகையின் பின் வரனுக்குரிய காணிக்கை வரதட்சணை என்றும் ஸ்ரீதனம் எனப்படும் பெண்ணோடு கொடுக்கப்படும் பொருள் சீதனம் என்றும் ஆணுக்குப் பெண்வீட்டார் கொடுக்க வேண்டும் என்னும் முறை வழக்கத்தில் வந்தது.

வட இந்தியாவில் இருந்து தென்னிந்தியா புகுந்த சைன மதத்தினராலேயே பெண்ணடிமை தலைதூக்கியது எனலாம். பெண் நேராக வீடுபேறு அடைய முடியாது. பெண்பிறவி இழிபிறவி என்றெல்லாம் வன்மத்தை ஏற்படுத்தினர். அதன் பின் வந்த வேத ஆரியர்கள் கூட ஆணுக்கு நிகராகப் பெண்ணைப் போற்றிப் பார்க்கும் பக்குமற்றவர்களாகவே இருந்தார்கள்.

பெண்கள் இளமைக் காலத்தில் பெற்றோரையும் பின் கணவனையும் அதன் பின் பிள்ளைகளையும் சார்ந்தே வாழ வேண்டும் என்ற நிலை உருவாகியது. தாய்வழி சமுதாயம் தந்தை வழிச் சமுதாயமாக மாற்றம் பெற்றது. அக்காலகட்டத்திலிருந்து விதவைகள் மறுமணம் செய்யக் கூடாது, கணவன் இறந்த பின் தீக்குளித்து உயிர்விடுதல், எட்டு வயதுப் பெண் பிள்ளைக்கும் திருமணம் செய்வித்து அவள் உயர்ச்சியைத் தடுத்தல், ஆண்கள் பல பெண்களைத் திருமணம் செய்வதற்குத் தடையில்லை போன்ற அடக்குமுறைகள் ஆரம்பமாயின.

இன்றைய நிலையில் மெல்ல மெல்ல இந்த முறைகள் திரும்பவும் மாற்றம் பெற்று வந்திருப்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் தம்முடைய பலவீனங்களை பலமாக மாற்றி வானவூர்தி இயக்கவும் கடலில் கப்பல் விடவும் விண்வெளிப் பயணம் மேற்கொள்ளவும் குத்துச் சண்டை புரியவும் ஆரம்பித்து விட்டார்கள். பெண்களுக்கு பல உரிமைகள் வழங்கப்பட்ட போதும், ஆணாதிக்க மரபணு துரிதமாகத் தொழிற்படும் ஆண்கள், இன்றும் பெண்களை அடிமைகளாக பாவனை பண்ணுகின்ற குணாதிசயங்கள் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இது காலப் போக்கில் நீக்கப்பட்டு விடும் என்னும் நம்பிக்கை பெண்கள் மத்தியில் இருக்கின்றது.

மேலும் பெண்மையைக் குறி வைத்து அவளின் சுயநினைவற்ற நிலையில் மானபங்கம் செய்கின்ற மனநிலை பாதிக்கப்பட்ட ஆண்கள் இன்றும் உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இதற்கு தீர்வு காண்பது கடினம். காமம் என்பது புனிதமானது என்ற புரிந்துணர்வும், சந்ததி வளர்ச்சிக்கு உரியது என்னும் அறிவும், சிறுவயதில் இருந்து போதிக்கப்பட்டால் அன்றி தீர்வு காண முடியாது. மனிதன் தானாகவே தன்னை அடக்கும் மனவளக் கலையைக் கற்றுத் தேற வேண்டியது அவசியம். காலமே அனைத்துக்கும் தீர்வு சொல்லும். சிணுங்குவதை விட்டுவிட்டு மனச்சிரத்தையுடன் பெண்கள் தொழிற்பட வேண்டியது அவசியம்.

**கௌசி சிவபாலன்...**

# இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்துடன் தொடர்ச்சியாக கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ள AIA இன்ஷூரன்ஸ்

**இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்துடனான 2022 இற்கான தனது தொடர்ச்சியான நான்காவது வருடக் கூட்டாண்மையின் புதுப்பித்தலை AIA ஸ்ரீலங்கா அண்மையில் அறிவித்திருந்தது. AIA இனால் விற்பனை செய்யப்படுகின்ற ஒவ்வொரு புதிய காப்புறுதி சார்பாகவும் ரூபா.100 இனை இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்திற்கு நிறுவனம் தொடர்ச்சியாக நன்கொடையாக வழங்குகின்ற நான்காவது வருடமாகவே 2022 அமைந்துள்ளது.**

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமானது (MOU) AIA இன் பிரதிப் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான முகவர் நிறுவன அதிகாரி உபுல் விஜேசிங்க மற்றும் புற்றுநோய்ச் சங்கத்தின் தலைவர் அனோஜா கருணாரத்ன ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இலங்கையில் மிகவும் வேகமாக அதிகரித்து வரும் கவலைக்குரிய விடயமாக புற்றுநோய் காணப்படுவதுடன் இதற்கான சிகிச்சை, அதனைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் ஏழ்மையான மிகவும் தேவையுடைய புற்றுநோயாளர்களுக்குப் பராமரிப்பு மற்றும் ஆறுதலளித்தல் போன்றவற்றை வழங்குவதற்காக AIA இனால் கடந்த சில வருடங்களாக நன்கொடையாக வழங்கப்படுகின்ற நிதியானது இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

உண்மையில் தற்போது புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்கள் இலங்கையில் பாரிய பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளன. அதாவது இலங்கையில், உலகில் நிகழும் 74% இனையும் விட அதிகரித்த 80% மரணங்களுக்குப் பொறுப்பானதாக இவையே காணப்படுகின்றன.

AIA பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர கருத்துத் தெரிவிக்கையில், 'நாட்டின் முதன்மையான சுகாதாரப் பிரச்சினையாகப் புற்றுநோய் திகழ்வதன் காரணத்தினால் தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்திற்கான எங்களுடைய ஆதரவை தொடர்ச்சியாக வழங்குவதாகவே நாங்கள் உறுதி பூண்டிருக்கின்றோம். உண்மையில் புற்றுநோய்க்கு விசேடமான சிகிச்சை முறைகள், அர்ப்பணிப்புமிக்க பராமரிப்பு, மற்றும் புற்றுநோயாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்குமான மிகவும் உறுதியான நிதியியல் ஆதரவு போன்றன மிகவும் அவசியப்படுகின்றன. எனவே இவ் விடயத்தில் மிகவும் அக்கறையுடன் மிகச்சிறப்பான சேவையினை வழங்கி வரும் இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்திற்கு நாங்கள் எங்களுடைய பாராட்டைத் தெரிவிப்பதோடு இந்த சிறந்த நோக்கத்திற்காக நாங்கள் தொடர்ச்சியாக உதவுவதற்கும் விரும்புகின்றோம்' எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்தின் தலைவர் அனோஜா கருணாரத்ன AIA இனுடைய தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக் கருத்துக் கூறுகையில், 'AIA எங்களுடனான கூட்டாண்மையினைப் புதுப்பிப்பதையிட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி தெரி



விப்பதோடு, இலங்கைப் புற்றுநோய்ச் சங்கத்தின் செயற்பாடுகளுக்குத் தொடர்ச்சியாகத் தனது நிதியியல் ரீதியான ஆதரவையே AIA வழங்கும். உண்மையில் கடந்த வருடம் நிலவிய மிகவும் கடினமாக தருணங்களின் போது மிகவும் ஏழ்மையான அதிகம் தேவையுடைய புற்றுநோயாளர்களுக்குச் சிகிச்சையினை வழங்குவதற்கு AIA தொடர்ச்சியாக வழங்கிவரும் நிதி உதவி மிகவும் பேருதவியாக அமைந்திருந்தது. மேலும் நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியிலும் AIA இன் ஆதரவிற்கு நாங்கள் மிகவும் மனப்பூர்வமாகவே எங்கள் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்' எனத் தெரிவித்திருந்தார். 'தேசிய புற்றுநோய் நிறுவனம் மற்றும் அபெக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருகின்ற ஏழ்மையான நோயாளர்களுக்குத் தற்காலிக தங்குமிடம் மற்றும் பராமரிப்பு வசதிகளை வழங்குகின்ற 'பண்டாரநாயக்க மெமோரியல் ஹோம்ஸ்' இன் பாரியளவிலான செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்கு AIA இனால் வழங்கப்படுகின்ற குறிப்பிடத்தக்க நிதிப் பங்களிப்பினையே நாங்கள் பயன்படுத்தி வருகின்றோம். பொதுமக்களுக்கு அறிவூட்டும் மிகவும் முக்கியமான பகுதியாகக் காணப்படும் புற்றுநோயினைத் தடுத்தல், அதனை ஆரம்பத்தில் கண்டறிதல் மற்றும் அதற்காகச் சிகிச்சையளித்தல் போன்றவற்றின் விழிப்புணர்வை அதிகரிப்பதிலும் நாங்கள் மிகவும் கவனம் செலுத்தி வருகின்றோம். நோயாளிகள் மருத்துவ, மற்றும் உள ரீதியாக இரு வழியிலும் மிகச்சிறந்த ஆரோக்கியப் பராமரிப்பு மற்றும் உதவிகள் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கான அனைத்துச் சாத்தியமான விடயங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மிகவும் வலி நிறைந்த சிகிச்சைக்குள்ளாகும் நோயாளர்களுக்கு நேரடியான பராமரிப்பை வழங்குவதற்காகவும் நாங்கள் வெளிநிறுவனங்களின் உதவிகளிலும் மிகவும் சார்ந்திருக்கின்றோம். ஆகவே எங்களுடைய நோக்கத்திற்காக AIA இனுடைய ஆதரவைப் பெற்றிருப்பது எங்களுக்கு மிகப்பாரிய பலமாகவே இருந்து கொண்டிருக்கின்றது' என அவர் மேலும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

தேசம், சமூகம் மற்றும் மக்கள் என்ற வகையில் தங்களுடைய முயற்சிகளில் உறுதி பூண்டுள்ள இலங்கையர்களின் நீண்ட ஆயுளுடனான, சிறந்த, மற்றும் ஆரோக்கியமாக வாழ்க்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு AIA மிகவும் அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயற்படுகின்றது. மேலும் தற்போது நிலவுகின்ற பாரிய பொருளாதாரச் சவால்கள் நிறைந்த கடினமாக தருணங்களிலும் இலங்கை மற்றும் இலங்கை மக்களுக்கு தன்னாலான அனைத்து வழிகளிலும் AIA நிறுவனம் உதவிகளை வழங்குவதற்கு மிகவும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது.

# 2030ம் ஆண்டுக்குள் காபன் நடுநிலை மட்டத்தை அடையும் இலக்குடன் முன்னெடுக்கப்படும் திட்டம்



**அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான கடன் வழங்கலில் சர்வோதய டெவலப்மெண்ட் ஃபினான்ஸ், 2030 ஆம் ஆண்டுக்குள் காபன் நடுநிலை மட்டத்தை அடையும் இலக்குடன், நிறுவனத்தின் காபன் அடிச்சுவட்டைக் குறைப்பதற்கான ஒரு இலட்சியப்பற்றுடனான முயற்சி தொடர்பில் அறிவித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் திகதி அனுட்டிக்கப்படும் உலக சுற்றுச்சூழல் தினத்தைக் குறிக்கும் வகையில், சர்வோதய டெவலப்மெண்ட் ஃபினான்ஸ் நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டது.**

காபன் நடுநிலை மட்டத்தை அடைவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான நிலந்த ஜெயநெத்தி, "எமது நிலைபேண்தகைமை கட்டமைப்பு மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேற்றியலுடனான கடன் வழங்கல் ஆகிய தொலைநோக்கு இலக்கினால் நாங்கள் வழிநடத்தப்படுகிறோம். இலங்கை மற்றும் உலகெங்கிலும், சுற்றுச்சூழல் மற்றும் சமூகங்களில் ஏற்படுத்தும் தாக்கத்திற்கு அனைத்து மக்களும் மற்றும் நிறுவனங்களும் பொறுப்பேற்க வேண்டும். இதன் விளைவாக, எங்களின் நிலைபேண்தகைமை கட்டமைப்பால் வழிநடாத்தப்பட்டு, காபன் நடுநிலை மட்டத்தைப் பேணும் நிறுவனமாக உருவெடுக்கும் இறுதிக் குறிக்கோளுடன், பல்வேறு முயற்சிகள் மூலம் எமது காபன் அடிச்சுவட்டைக் குறைக்க எண்ணுகிறோம்" என்றார்.

இது தவிர, நாம் எமது சமூகங்களைப் பற்றியும் அக்கறை கொண்டுள்ளோம். கல்வி, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், தொழில் முயற்சியாண்மை, சமூக நலன், பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் மாற்றுத்திறன்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கிய சமூக ஆதரவு மற்றும் மேம்பாட்டிற்கான தனித்த மற்றும் பல தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். எனவே, 2022 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தைக் குறிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், பூமிக்காகவும், நமது மக்களுக்காகவும் நமது பங்கை ஆற்றுவதற்கான நமது உறுதிப்பாட்டைப் புதுப்பிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறோம்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான சுற்றுச்சூழல் மையப்படுத்தப்பட்ட முயற்சிகளில் ஒன்று, கொழும்பு பல்கலைக்கழகம், சுற்றுச்சூழல் அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கம் மற்றும் சுவர்ண வாஹினி தொலைக்காட்சி அலைவரிசை ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட மரம் நடுகைத் திட்டமாகும். இதன்படி, 50,000 இலுப்பை மரங்களை நாட்டும் நடவடிக்கைக்கு சர்வோதய டெவலப்மெண்ட் ஃபினான்ஸ் நிறுவனம் அனுசரணை வழங்க உறுதியளித்துள்ளதுடன், ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஒரு மரம் நடுகை நிகழ்வுடன் இச்செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அம்பாறையிலும் இவ்வாறான 1,000 மரங்கள் நாட்டப்பட்டதுடன் நிறுவனத்தின் இணை அனுசரணையில் சர்வோதய பண்டாரகம மையத்திலும் ஒரு நிகழ்வு நடைபெற்றது.

இந்த மரம் நடுகை நிகழ்வுகள் ஒவ்வொன்றும் முன்பதாக, சுற்றுச்சூழலின் மீதான பொறுப்புணர்வின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த சுருக்கமான கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து சாதாரண தர மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கணித பாட கருத்தரங்குகளின் பின்னர், கருத்தரங்கில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் அவர்கள் கொண்டு சென்று நாட்டுவதற்காக தலா ஒரு இலுப்பை மரம் வழங்கப்பட்டது. அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க தேசிய கல்லூரியிலும், அம்பாறை உஹான் மகா வித்தியாலயத்திலும் ஏற்கனவே கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளதுடன், அண்மையில் கெப்பித்திகொல்லாவ மத்திய கல்லூரியிலும் இந்நிகழ்வு இடம்பெற்றது.

பசுமை பேணும் வகையிலான கிளைகளை நோக்கி நகர்வதற்கான பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக, 2019 இல், கொழும்பு 08 இல் அமைந்துள்ள நிறுவனத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் மேற்கூரையில் சூரிய மின்னுற்பத்திக் கலங்களை பொருத்துவதன் மூலம் மாதாந்த மின்சாரத் தேவைகளில் ட 35% இப்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# கதிர்காமம் இராமகிருஷ்ண மிஷன் மடம் 1953 இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் திறந்து வைக்கப்பட்டது

## பாதயாத்திரீகர் மத்தியில் சுவாமி தக்ஷயானந்த உரையாற்றும்போது தெரிவிப்பு

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்றில் முதல் தடவையாக யாழ். கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் உரையாற்றுகையில்..

கதிர்காமத்தில் உள்ள இராமகிருஷ்ண மடம் பற்றி இங்கு கூறுவது பொருந்தும்.

1943 ஆம் ஆண்டு கதிர்காமத்தில் உள்ள புனித ஆலயத்திற்கு ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களுக்கு சேவை செய்யத் தொடங்கியது. விசாலமான கட்டிடங்கள் கட்டப்பட்டு ராமகிருஷ்ணா மிஷன் மடம் 1953 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் தேதி அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த மாண்புமிகு டட்லி சேனாநாயக்க அவர்களால் முறையாகத் திறந்து வைக்கப்பட்டது.

அப்போதிருந்து, மத வேறுபாடின்றி யாத்ரீகர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டது. ஜூலைஆகஸ்ட் மாதங்களில் நடக்கும் வருடாந்தர திருவிழாவின் போது, 17 நாட்களுக்கு தொடர்ச்சியாக, ஒரு நாளைக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட (10,000) யாத்ரீகர்களுக்கு இலவச உணவை மிஷன் வழங்கியது. மத விரிவுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள் மடத்தில் வழக்கமான நடவடிக்கைகள். 1976 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் வரை மிஷன் ஒரு குடியுரிமை சுவாமியின் மேற்பார்வையின் கீழ் அதன் உன்னத சேவைகளைத் தொடர்ந்தது. என்றார்.

கடந்த மாதம் நான்காம் திகதி யாழ். செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து சிங்கராஜா ஜெயராஜா தலைமையிலே ஆரம்பமான பாதயாத்திரை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு நேற்றுடன் ஒரு மாத காலத்தை பூர்த்தி செய்கின்றது.

குழுவினர் கடந்த 5 ஆம் திகதி காலை மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் மட்டக்களப்பு காரைதீவு ஒன்றியத்தின் காலை போசனத்துடன் , புறப்பட்டு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தை வந்தடைந்தார்கள்.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் ஆகியோர் விடுத்த அழைப்பை ஏற்று அங்கு அவர்கள் விஜயம் செய்தார்கள்.

மிசனுக்கான இவ் விஜயம் வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெறுவதால் முக்கியத்துவம் பெறுகிறது. முன்னதாக இராமகிருஷ்ண ஆலயத்தில் பஜனை யும் விசேட பூஜையும் இடம்பெற்றன. இல்ல மாணவர்கள், பாதயாத்திரீகர்கள் இணைந்து சுவாமி நீலமாதவானந்தா ஜீ தலைமையில் ஒரு மணி நேரம் பஜனை செய்தனர்.

அவ்வமயம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் பட்டிப்பளை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சிவஞானம் அகிலேஸ்வரன் ,உதவி கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.பாதயாத்திரீகர்கள் இ.கி.மி. விபுலானந்த மணிமண்டபத்தில் தக்க வைக்கப்பட்டனர்.பிற்பகலில் அங்கு அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. வைத்திய நிபுணர் டாக்டர் சுந்தரேசன் தலைமையிலான குழுவினர் இம் மருத்துவ முகாமை நடாத்தினர். முடிவில் பாதயாத்திரை குழுத்தலைவர் சி.ஜெயராசா தெரிவிக்கையில்..

வரலாற்றில் முதல் தடவையாக மிஷனுக்கு செல்வது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எங்களில் 99 வீதமானவருக்கு மிஷின் பற்றி தெரியாது. இங்கு வந்த பின்பே சுவாமிகளது அன்பான வரவேற்பையும் உபசரிப்பை யும் உணரமுடிந்தது.குருகுல மாணவர்கள் நேரத்திற்கு ஒழுங்குடன் நடப்பதை அவதானிக்க முடிந்தது.அதுமட்டுமின்றி மருத்துவ முகாமையும் நடாத்தினர்.

ஆகவே, எங்களை அன்புடன் அழைத்த சுவாமிகளுக்கு நன்றி கூறுகின்றோம். அதற்காக ஒருங்கிணைப்பைச் செய்த எமது ஆலோசகர் சகாதேவராஜா ஐயாவுக்கும் நன்றிகள்.

இன்னும் 2 தினங்களில் நாங்கள் அம்பாறை மாவட்டத்தை அடைவோம். 22 ஆம் திகதி உகந்தை மலை முருகன் அருகில் உள்ள காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் அதன் ஊடாக காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றோம். முருகன் அருளால் எதிர்வரும் 28 ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடைய இருக்கின்றோம் என்றார்.



மல்லாகம்.வாழ் புலம்பெயர் உறவுகளால் 10 இலட்சம் மதிப்புள்ள உலர் உணவுப் பொருட்கள் மல்லாகம் கிராமசேவையாளர் பிரிவிலு ள்ள 200 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதில் யாழ்மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவரூபன் மற்றும் இளைஞர் சேவை அதிகாரி சபேசன் மற்றும் மல்லாகம் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## அசாதாரண நிலைமைக்கு...

மேற்கொள்ளப்பட்டுள்ளன. 21வது திருத்தம் ஏற்கனவே அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சிக்கல் நிலைமைக்கு வெற்றிகரமான தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்களை ஏமாற்றி எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் வருந்தத்தக்கது என்றும் ஜனாதிபதி கூறினார்.

எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை முறியடித்து, ஏற்றுமதி மற்றும் விவசாயப் பொருளாதாரத்திற்கு முன்னுரிமை அளித்து புதிய முதலீடுகளுடன் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. ஆனால் உலகம் முழுவதும் எதிர்கொள்ளும் கோவிட் தொற்று நோய் நிலைமை அனைத்து நாடுகளையும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்றுள்ளது. பெரும் பணக்கார நாடுகள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு தேடுகின்றன.

சர்வகட்சி ஆட்சியில் இந்தப் பின்னணியில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. ஆனால் அது தோல்வியடைந்ததால் .ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றியடைந்துள்ளதுடன், அடுத்த சில வாரங்களுக்குள் கடன் உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பின்னணி அமைக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளின் தூதர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

சரியான பொருளாதார வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் எதிர்கால சந்ததிக்கு உறுதுணையாக இருப்பது மக்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

## இலங்கையின் முயற்சிக்கு...

இருப்பினும், ரஷ்ய வங்கிகள் மற்றும் தளபாடங்கள், போக்குவரத்து மற்றும் நிதி ஆகியவற்றில் உலகில் தடைகள் உள்ளன. இது இலங்கை அரசாங்கம் அறிந்திருக்க வேண்டிய மற்றும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

ரஷ்யாவுடனான இலங்கையின் உறவைப் பொறுத்தவரை, அவர்கள் என்ன பாதையை விரும்புகிறார்கள் என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் ரஷ்யாவை நம்பகமான பங்காளியாக, நல்ல ஜனநாயகப் பங்காளியாகக் கருதினால், அது உண்மையில் இலங்கை மக்களுக்கு நன்மைகளைத் தரும், அதைத்தான் இலங்கை அரசாங்கம் மதிப்பிட வேண்டும்.

கொழும்பு 7 இல் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் கூறியதாவது,...

சில நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு அரசாங்க மாற்றத்திற்காக காத்திருப்பது தவறானது.

இந்தத் தேவையின் போது இலங்கைக்கான ஆதரவையோ உதவிகளையோ சர்வதேச சமூகம் தடுத்து நிறுத்துவதாக சில தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையுடனான அமெரிக்காவின் ஆதரவும் நட்பும் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவிகளில் யார் அமருகிறார்கள் என்பதன் அடிப்படையில் அல்ல என கூறினார்.

நாங்கள் நல்லாட்சி மற்றும் மக்களின் குரல்களை பிரதிபலிக்கும் நேர்மறையான சீர்திருத்தங்களை ஊக்குவிக்க விரும்புகிறோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மற்றும் உதவிகளைப் பெறுவதற்கான அதன் பல பரிந்துரைகள் இலங்கையின் பொருளாதாரத்தின் சிறந்த நலனுக்காக இருப்பதாக அவர் கூறினார். இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்கள் பயனடைவார்கள்.

சர்வதேச நாணய நிதியம் சிபாரிசு செய்வதால் மட்டும் இலங்கை செய்யக் கூடாது. ஆனால் அது உண்மையில் நாட்டுக்கு நல்லது.

முதலீட்டாளர்கள் நாட்டிற்கு முதலீட்டைக் கொண்டுவருவதற்கு முன், முதலீட்டாளர்கள் முன்கணிப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை நாடுகிறார்கள் என்று அவர் கூறினார்.

## ஸ்ரீலங்கன் விமான சேவைகள்...

நிர்வகித்து வருவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உறுதிப்படுத்தியுள்ளது. நடைமுறையில் உள்ள நிலைமைகளை நிர்வகிக்க, விமான அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் எரிபொருள் நிரப்புவதற்காகவும் சில நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

குறிப்பிட்ட சில விமானங்களின் பயண நேரத்தில் சில மாற்றங்கள் இருக்கலாம். ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தனது விமான அட்டவணையை 100 சத வீதமாக செயல்திறனுடன் முன்னெடுத்து வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

## கருவாட்டின் விலைகள்...

சூரை கருவாடு ஒரு கிலோ கிராம் 2 ஆயிரத்து 700 ரூபா முதல் 2 ஆயிரத்து 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கிராம் உருளை கருவாடு 2 ஆயிரத்து 200 ரூபா முதல் 2 ஆயிரத்து 300 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கட்ட கருவாடு 3 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலைகள் காரணமாக உணவுக்காக கருவாட்டை கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறியுள்ளனர். இந்த விலை அதிகரிப்பு குறித்து கருத்து வெளியிட்டுள்ள வர்த்தகர்கள், டீசல் விலை அதிகரிப்பு மற்றும் டொலரின் பெறுமதி அதிகரிப்பு என்பன காரணமாக கருவாடுகளின் விலைகள் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவருடன்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் புத்திக பத்திரன ஆகியோருடன் கூட்டமைப்பின் தரப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற சந்திப்பில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய கடுமையான பொருளாதார சிக்கல், அரசியல் சூழ்நிலை, அரசியல் மாற்றத்திற்கான முயற்சிகள், தமிழ்மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள், அரசியல் யாப்பு விடயங்கள், நாட்டின் நிரந்தர மீட்சிக்கு அரசியல் தீர்வின் முக்கியத்துவம், தொல்லியல் நடவடிக்கைகளினால் ஏற்படும் இன முரண்பாடு என முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## ஜப்பான் முன்னாள் ...

சுட்டதாகவும், இதனால் அவர் படுகாயமடைந்ததாகவும் என். ஹெச்.கே ஊடகம் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புபட்ட 41 வயது ஆடவர் ஒருவரை பொலிஸார் சம்பவ இடத்தில் வைத்து கைது செய்துள்ளனர். டெட்சு யமகாமி என்ற அந்த ஆடவர் கடல்சார் பாதுகாப்புப் படையின் முன்னாள் உறுப்பினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கைத்துப்பாக்கிகள் தடை செய்யப்பட்டுள்ள ஜப்பானில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் அரிதான ஒன்றாக கருதப்படுகிறது.

3 முறை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவர் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு விழுந்ததாகவும் ஜப்பானியச் செய்தியாளர் ஒருவர் கூறினார்.

2020 இல் சுகாதாரக் காரணங்களுக்காக 67 வயதான அபே பிரதமர் பதவியில் இருந்து வெளியேறினார். தீவிர பழமைவாத மற்றும் தேசியவாதியாக அறியப்படும் அபே, தனது தனித்துவமான 'அபெனோமிக்ஸ்' என்று அழைக்கப்படும் ஆக்ரோஷமான பொருளாதாரக் கொள்கையுடன் வளர்ச்சியைத் தூண்டுவதை குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வந்துள்ளார்.

## மின்கட்டணப் பட்டியலை ...

வழங்குதல் 2. குறுஞ்செய்தி (SMS) மூலம் – மாதாந்த கட்டணத்தைப் படித்த பிறகு, மாதாந்த மின்சாரக் கட்டணம் CEB இல் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பப்படும். இதற்கு பதிவு செய்ய, CEB பிரதிநிதியின் உதவியைப் பெறலாம். அல்லது "REGபத்து இலக்க மின்சாரக் கணக்கு எண்" என்று 1987க்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் உங்களைப் பதிவு செய்யலாம்.

3. CEBCare மொபைல் செயலியைப் பயன்படுத்தி மாதாந்த கட்டண விபரங்களை அறிந்துகொள்ளக்கூடிய வசதியைப் பெறலாம். மேலும், மின்னஞ்சல் ஊடாகவும் மின்கட்டண விபரங்களை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது. தற்போதைய காகித தட்டுப்பாடு காரணமாக மின்கட்டணத்தை முன்கூட்டியே அச்சடித்து விநியோகம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதால், இந்த புதிய முறைகளை கையாண்டால் செயல்திறனை அதிகரிப்பது மட்டுமன்றி, கடதாசி அச்சிடும் செலவை கட்டுப்படுத்தலாம் என்பதாலும் இந்த திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## விமான நிலைய வண்டிகளின்...

யாழ்ப்பாணம் செல்லும் வாடகை வண்டியின் கட்டணம் 73,000 ரூபாவை அண்மித்துள்ளது.

இலங்கையில் இருந்து அண்டை நாடான இந்தியாவிற்கு விமான டிக்கெட்டின் சராசரி விலை சுமார் 70,000 ரூபாவாகும்.

கட்டுநாயக்காவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் கட்டணத்தை விடவும் இந்தியாவிற்கு விமானத்தில் செல்வதற்கு குறைவான பணமே தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் வரலாறு காணாத அதிகரிப்பை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைதியான முறையில் ...

பயன்படுத்துமாறும் பொது மக்களின் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை மதிப்பதாகவும் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

சட்ட கட்டமைப்பிற்குள் மக்கள் தமது உரிமைகளை அனுபவிக்க வேண்டியது அவசியமாகும். சமாதானத்தை சீர்குலைக்கும் அதேபோல் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் எந்த செயற்பாட்டிலும் செயற்பாடுகளிலும் ஈடுபட கூடாது.

மக்களின் கருத்து வெளியிடும் உரிமைக்கு பொலிசார் எப்போதும் மதிப்பு அளிப்பதாக பொலிஸ் மாஅதிபர் சுட்டிக்காட்டினார்.

அமைதி வழியிலான கூட்டங்களுக்கு ஆதரவளிக்க பொலிசார் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ,எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் பிரவேசிக்க தடை விதிக்குமாறு கோரி பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதவான் கேமிந்த பெரேரா நேற்று முன்தினம் நிராகரித்துள்ளார்.

நேற்று (08) இன்று (09) கோட்டையில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதிக்குள் எதிர்ப்பில் ஈடுபடுவோர் பிரவேசிக்க தடை விதிக்குமாறு கோரி பொலிஸாரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முன்வைத்த இந்த கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதவான் அதனை நிராகரித்தார்.

குற்றச்செயல் இடம்பெற்றால் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரங்கள் உள்ளதால், குறித்த கோரிக்கையை நிராகரிப்பதாக நீதவான் கேமிந்த பெரேரா நேற்று முன்தினம் அறிவித்தார்.

## சவூதி அரேபிய தூதரகத்தின்... (03ஆம் பக்கத் தொடர்)

முக்கியத்துவம் அளித்து, இந்த நேரத்தில் இலங்கைக்கு சாத்தியமான அனைத்து ஆதரவுகளையும் நல்குவதாக சவூதி அரேபியத் தூதரகத்தின் பொறுப்பாளர் ஒர்கோபி இதன்போது உறுதியளித்துள்ளார்.

## வெளிநாட்டு வேலை... (03ஆம் பக்கத் தொடர்)

சபையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மை பதிவு செய்து வெளிநாடுகளில் வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து இலங்கைகளுக்கும் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இருபதாயிரம் ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை ஓய்வூதியமாக பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு... (03ஆம் பக்கத் தொடர்)

தொம்பகொட பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு அவர் சென்றுள்ளார்.

அங்கு அவர் ஏனையோருடன் உரையாடிக் கொண்டிருந்த போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ள நிலையில் அங்கிருந்து அவர் வெளியேறினார்.

இதன் பின்னர் சிறிது நேரத்தில் மீண்டும் திரும்பி வந்த பாராளுமன்ற உறுப்பினர் வீடு மற்றும் வான் நோக்கி மூன்று முறை துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு ஹொரணை நோக்கி தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சுற்றுலா பயணிகளின்...

கடந்த மே மாதம் நாட்டுக்கு 30,207 சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர்.இந்த எண்ணிக்கை ஜூன் மாதம் 32, 865ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி, முதல் அரையாண்டில் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்தை கடந்துள்ளது.கடந்த ஜூன் மாதம் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வந்துள்ளனர்.

இதற்கமைய இந்தியாவிலிருந்து 6,650 பேரும், பிரித்தானியாவில் இருந்து 3,199 பேரும், அவுஸ்திரேலியாவில் இருந்து 2,448 பேரும் நாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## இலங்கையின் நிலைவரம் ஏனைய ...

முகங்கொடுத்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இதனால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலானது இலங்கையின் பொருளாதார மற்றும் மனித உரிமைகள் நிலைவரத்தை ஒத்ததாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையினால் நிகழ்நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்றுக்கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## மருத்துவர்கள் 1500 பேர் கடந்த...

அதற்கமைய, கடந்த 6 மாதங்களில் சான்றிதழுக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு, ஜனவரி 138, பெப்ரவரி 172, மார்ச் 198, ஏப்ரல் 214, மே 315, ஜூன்449ஆக பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திங்கள் முதல் புகையிரத...

20 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ரயில் கட்டண அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தற்போது அச்சிடப்பட்டு வருவதாகவும் அரசாங்க அச்சக அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணங்கள் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் ரயில் கட்டணங்களில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றும் தற்போதைய எரிபொருள் நெருக்கடி உட்பட ஏனைய விடயங்களைக் கவனத்திற் கொண்டு இந்த கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் ஆகக் குறைந்த பத்து ரூபா ரயில் கட்டணம் 20 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## எரிபொருள் நிலையத்தில்...

வரிசையில் இருந்தவர் தேனீர் அருந்துவதற்காக சென்று மீண்டும் வந்த போது அவரின் காருக்கு முன்னால் திடீரென வரிசையில் நிறுத்தப்பட்டிருந்த காரை அகற்றுமாறு கோரிய போதே மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.தாக்குதலில் 25 வயது இளைஞர் ஒருவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனகவை விசாரணைக்கு ...

வெளியிட்டு அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். நாட்டில் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 200 ரூபாவுக்கும் குறைவாக வழங்க முடியுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் 'கோப்' குழுவில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய உரம் இன்று ...

இந்தநிலையில் உர விநியோகம் ஜூலை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெரும் போகத்துக்கு தேவையான உர இருப்புக்களை விநியோகிப்பதற்கு தேவையான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## ஆத்திரமடைந்த பயணிகள்...

சேதமடைந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (06) மாலை நடந்துள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான பயணிகளை ஏற்றிச் செல்லும் இரண்டு விரைவு ரயில்கள் மாத்தறை மற்றும் காலி நோக்கிச் சென்றுகொண்டிருந்தன, ஆனால் அவைகள் பாணந்துறை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படவில்லை.இது தொடர்பில் ரயில் நிலைய அதிபரிடம் அங்கிருந்த பணயிகள் கேள்வியெழுப்பியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து பயணிகள் திடீரென ரணில் நிலைய அதிபரின் அறைக்குள் அத்துமீறி நுழைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கின் குரல்



# பொதுப்போக்குவரத்து சேவைகளை நாடும் நிலைமை ஏற்பட்டுள்ளதால் திட்டமிட்ட பொறிமுறையூடாக சேவைகள் விரிவாக்கப்படல் வேண்டும்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

அரச அதிகாரிகளும் பொது மக்களும் பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்த நாடியுள்ளதால் பொதுப்போக்குவரத்து சேவையை விஷேட பொறிமுறையூடாக விரிவுபடுத்த வேண்டுமென கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பூ.பிரசாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டச் செயலாளருக்கு அவர் வியாழக்கிழமை (07) அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் அக்கடிதத்தில் மேலும் அவர்,தெரிவித்துள்ளதாவது,

நாடு தற்போது எதிர்நோக்குகின்ற பொருளாதார நெருக்கடியால்,எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மக்கள் பல அசௌகரிகங்களை எதிர்கொள்கின்றனர்.

இச்சூழலில்,பொதுப்போக்குவரத்து மற்றும் துவிச்சக்கர வண்டிகளை பயன்படுத்துவதை அதிகரிக்குமாறு அரசாங்கம் கோரிக்கையும் விடுத்துள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அதிகளவான அரச ஊழியர்கள், மாணவர்கள், விவசாயிகள், பொது மக்கள் என அனைவரும் பொது போக்குவரத்துச் சேவையை பயன்படுத்தவே முனைகின்றனர். எனவே, பொதுப்போக்குவரத்து சேவையானது விஷேட பொறிமுறையூடாக இடம்பெற வழிவகைகள் செய்யப்படல் அவசியம்.



இலங்கை போக்குவரத்து சபை மற்றும் மாகாண போக்குவரத்து சேவை உள்ளிட்ட சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளின், நேர ஒழுங்கமைப்பும், பயணிகளின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட வேண்டும். அத்துடன் அத்தியாவசிய நிலையைக்கருத்திற் கொண்டு விஷேட சேவைகளையும் அதிகரிப்பது அவசியம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சேவைகளை ஓரளவேனும் திருப்தியாக வழங்குவதற்கு, இச்சேவையை அத்தியாவசியமாக கருதி எரிபொருட்களை வழங்குவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதும் அவசியம்.அத்தோடு முச்சக்கரவண்டி சாரதிகளும் தங்களது சேவையை வழங்குவதற்கு ஏற்ற வகையில் எரிபொருள் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



யாழ் .கதிர்காம பாதையாத்திரைக் குழுவினர் நேற்று (08) வெள்ளிக்கிழமை களுவாஞ்சிக்குடியிலிருந்து குருமண்வெளி இயந்திரப்பாதையூடாக வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ மண்டூர் முருகன் ஆலயத்தை சென்றடைந்தனர். இவர்கள்,இன்று (09) சனிக்கிழமை காரைதீவை வந்தடைவர். இயந்திர பாதையில் பாதயாத்திரீகர்கள் பயணிப்பதை படத்தில் காணலாம். (படம்: காரைதீவு குறூப் நிருபர்)

களுமுந்தன்வெளி

# முத்துமாரியம்மன் பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுமுந்தன்வெளி விநாயகர் கலைக்கழகத்தின் 36வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஊடகவியலாளர் வ.சக்திவேல் எழுதிய பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா வியாழக்கிழமை (07) களுமுந்தன்வெளி முத்துமாரியம்மன் முன்றில் இடம்பெற்றது.இவ்விறுவெட்டிற்கு கிழக்கிலங்கையின் புகழ்பூத்த நிஸ்கமானந்தராஜா டனுஷ்ஷியன் இசையமைத்துள்ளார். இலங்கை வானொலி தேசிய கலைஞரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான கலைச்சுடர் வீ.பத்மசிறி மற்றும் புகழ்பூத்த பாடகி செல்வி சுலக்ஷனி புவனேந்திரராசா ஆகியோர் இணைந்து பாமாலையை பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

களுமுந்தன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் விநாயகர் கலைக்கழகத்தின் தலைவரும் ஆசிரியருமான மு.சவுந்தரராசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு, ஆன்மீக அதிதியாக களுமுந்தன்வெளி மாணிக்கப் பிள்ளையார் மற்றும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயங்களின் பிரதம குரு சிவ ஸ்ரீ த.கு.திருச்செல்வம் குருக்களும், பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கட்புல தொழில்நுட்பத்துறையின் தலைவர் கலாநிதி.சு.சிவரெத்தினமும் கலந்துகொண்டனர். சிறப்பு அதிதிகளாக களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலயத்தின் அதிபர் நா.ராமேஸ்வரன், களுதாவளை சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் தலைவர் ஞா.யோகநாதன், செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலைவர் யோகராஜா,முன்னாள் அதிபர் வீ.கோபாலபிள்ளை, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விநாயகர் கலைக்கழகத்தின் உப தலைவரும் ஆசிரியருமான ந.தரணிதரனின் வரவேற்புரையினைத் தொடர்ந்து, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் மட்டக்களப்பிற்கான தலைவர் த.வசந்தராஜா இறுவெட்டை வெளியீட்டு வைத்தார்.

முதற் பிரதியை, மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் ஆலோசகருமான தேசபந்து எம்.செல்வராஜா பெற்றுக்கொண்டார்.

இதன்போது பாடலாசிரியரும், ஊடகவியலாளருமான வடிவேல் சக்திவேலுக்கு கலைக்கழகத்தினரால், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

# குடும்பதகராறில் ஒருவர் வெட்டிக்கொலை ஒன்பது பேர் கைதாகி விளக்கமறியல்

(மண்டூர் தினகரன் நிபர்)



மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் கணவன், மனைவிக்கிடையே இடம்பெற்ற சண்டையில், தலையிட்டு சமாதானப்படுத்த வந்த மைத்துணர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றது. இக்கொலை தொடர்பில், ஒன்பது பேரை கைது செய்துள்ள பொலிஸார், அவர்களை விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

சந்திவெளி கலலூர் வீதி பாலைத்தேனாவைச்சேர்ந்த 38 வயதுடைய கந்தசாமி இளையராஜா என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

சம்பவ தினம் இரவு 8.30 மணியளவில்,கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட வாய்தர்க்கம் சண்டையாக மாறியுள்ளது.இதையடுத்து,மனைவியின் தாயார், மகனை அழைத்துள்ளார். இருவரையும் சமரசப்படுத்த முயன்ற வேளையில், மனைவியின் உறவினர்கள் மைத்துனர் மீது கத்தியால் வெட்டினர்.இதில் சம்பவ இடத்திலே அந்நபர், உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு ஏறாவூர் நீதிமன்ற நீதிவான், தடயவியல் பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரிகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

# அக்கரைப்பற்று பஸ் டிப்போவில் பணிபுரிவோர் பணிப்பகிஷ்கரிப்பு

(நமது நிருபர்)

அக்கரைப்பற்று இ.போ.ச பஸ் டிப்போவில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தம் இன்று சனிக்கிழமை மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது. அலுவலகத்துக்குச் செல்வதற்கு எரிபொருள் வழங்குமாறே இவர்கள் இந்த வேலை நிறுத்தத்தை முன்னெடுத்துள்ளனர்.

சுமார் 162 பேர் பணிபுரியும் இந்த அக்கரைப்பற்று பஸ் டிப்போவில் 32 பஸ்கள் உள்ளன.இவை,கொழும்பு,வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்கான சேவைகளிலும் ஈடுபடுகின்றன.

இன்றைய விலையேற்றம் மற்றும் எரிபொருள் நெருக்கடிகளால் அரசாங்க உத்தியோகத்தர் உள்ளிட்ட பல தரப்பினரும்,இலங்கை போக்குவரத்து பஸ்களிலே பயணஞ் செய்யத் தொடங்கியுள்ளனர். எனவே,சேவைகளை சீராக நடாத்த வேண்டுமானால்,இங்கு பணியாற்றுவோர் முறையாக வருகை தர வேண்டும்.

அலுவலகம் வருவதற்கு இவர்கள் ஆர்வமாக உள்ள போதிலும் தங்களது, மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளுக்கு எரிபொருள் இல்லாதுள்ளனர். இவற்றை வழங்குமாறு கோரியே இந்த பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறுகிறது. இந்நிலையில், பணிப்பகிஷ்கரிப்பில் இறங்கியுள்ள எவருக்கும் சம்பளம் வழங்கப்படாதென எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சிலர் தெரிவித்தனர்.இதனால் ஆத்திரமடைந்த சிலர்,அந்நபரை தாக்கமுற்பட்டதாகவும் அறிய வருகிறது.

# வீட்டில் ஓய்வெடுத்தவர் பாம்பு தீண்டி உயிரிழப்பு

(மணல்சேனை நிருபர்)

வெல்லாவெளி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட திக்கோடை,தும்பாலை பிரதேசத்தில் பாம்பு தீண்டியதில் வாயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திக்கோடை,தும்பாலை பிரதேசத்தை சேர்நத் (67) வதுடைய பொன்னுத்துரை மாணிக்கம் என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று தனது மாடுகளை பராமரித்து விட்டு வீட்டில் ஓய்வெடுத்திருந்தபோது, அறையினுள் மறைந்திருந்த பாம்பு இவரைத் தீண்டியது.இதில் மயக்கமடைந்த இவரை, உறவினர்கள் களுவாஞ்சிகுடி ஆதாரவைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி இவர், மரணமடைந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைய, சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளைதவக்குமார்,சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர், உறவினர்களிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கூப்பன்கள் அவசரமாக வழங்கப்பட வேண்டும்

(நிந்தவூர் குறூப் நிருபர்)

எரிபொருள் பிரச்சினைகளுக்கு மத்தியில், நிந்தவூரைச்சேர்ந்த பெண் உத்தியோகத்தர்களுக்கு, நிந்தவூர் பிரதேச செயலகத்தின் மூலமாக எரிபொருள் கூப்பன்கள் வழங்கப்பட வேண்டுமென நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர் தெரிவித்தார்.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம். றயிஸ் தலைமையில் இடம்பெற்ற இறக்குமதி நெருக்கடிக்கு தீர்வுகாணும் புத்தாக்க கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் (07) இடம்பெற்ற நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் ;



தற்போதைய எரிபொருள் நெருக்கடியான காலகட்டத்தில் அரசாங்க ஊழியர்களும் தங்களது கடமையை மேற்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். இருந்தபோதும், பெண் அரச உத்தியோகத்தர்கள் வாடகை வாகனங்களிலே கடமைக்குச் சென்று வருகின்றனர். அத்துடன் இவர்கள் பயணிக்கும் வாகனங்களுக்கும் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், நிந்தவூர் பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு கூப்பனை பெண் அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நிந்தவூர் பிரதேசத்தில் தற்பொழுது அமுல்படுத்தப்படவுள்ள எரிபொருள் நிரப்பு கூப்பனுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை, முதன்முதலில் நிந்தவூர் பிரதேச சபையே முன்னெடுத்தது. இப்பிரதேச சபையில், இரு உறுப்பினர்கள் எரிபொருள் நிலைய உரிமையாளர்களாக இருப்பதால், இவைகளை அரசியல் கோணத்தில் மக்கள் பார்க்கக்கூடும். இதற்காகவே, குறித்த திட்டத்தை பிரதேச செயலகம் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# முத்துமாரியம்மன் ஆலய திருச்சடங்கு ஆரம்பம்

(மணல்சேனை நிருபர்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய திருச்சடங்கு (09) இன்று சனிக்கிழமை மாலை திருக்கதவு திறக்கப்பட்டு ஆரம்பமாகிறது. திங்கட்கிழமை (11) அம்மன் ஊர்வலம் இடம்பெறும். மறுநாள் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை துறைநீலாவணையிலிருந்து குடிபெயர்ந்து வாழும் உறவுகளான துரைவந்தியமேட்டுக் கிராமத்திற்கு அம்மன் ஊர்வலம் புறப்படும். புதன் கிழமை (13) அம்மன் கன்னிக்கால் வெட்டும், மறுநாள் (14) மாலை சமுத்திரநீராடலுக்காக பெரியநீலாவணைக் கிராமத்திற்கு அம்மன் புறப்படுவார்.

பெரியநீலாவணையிலுள்ள விஷ்ணு ஆலயம், பேச்சம்மன் ஆலயம், பெரியதம்பிரான் ஆலயங்களுக்குச் சென்று விஷேட பூஜைகள் நடாத்தப்பட்டு, பின்னர் கடலுக்குச் சென்று விசேடபூஜை செய்யப்படும்.

# ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில் துரித தேசிய உணவு உற்பத்தி திட்டம் ஆரம்பம்

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)



தேசிய துரித உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழான வேலைத்திட்டங்கள், அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவின் பல்வேறு மட்டங்களிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் ஆலையடிவேம்பு வடக்கு வங்கிச்சங்க வாளாகத்தில் மரவள்ளி நடுகை நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன், முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், கருத்திட்ட முகாமையாளர் கே.சத்தியப்பிரியன், சமுர்த்தி முகாமையாளர்களான எஸ்.சுரேஸ்காந் மற்றும் கே.கவிதா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அரசாங்கத்தின் வேண்டுகோள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கைகளுக்கு அமைய இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஏற்படும் உணவு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.


இதனடிப்படையில், மரவள்ளிச்செய்கை மற்றும் வற்றாளைச்செய்கை, தானிய வகை உற்பத்திகள் போன்ற துரித உணவு உற்பத்திகள் என்பன துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் வீடுகள், பொது இடங்களில் இச்செய்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# தகாத உறவினால் கிடைத்த சிசுவை சீலையால் சுற்றி, தாயாரின் வீட்டுக்கு அனுப்பி வைப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர் )



திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெள்ளைமணல் சின்னம்பிள்ளை சேனை பிரதேசத்தில், தகாத உறவினால் கருவுற்ற ஆறுமாத சிசு பலியான சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

சீனக்குடா வெள்ளை மணல் சின்னம்பிள்ளை சேனை பிரதேசத்தில், பாடசாலை வீதியில் அமைந்துள்ள வீட்டிலே (07) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, கணவர் வெளிநாடு சென்று மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில், கிண்ணியா குறிச்சாங்கேணி பிரதேசத்தில் தனது தாயின் வீட்டில் வசித்து வந்த இருபது வயதுடைய யுவதி,அதே பிரதேசத்தில் பிறிதொரு நபருடன் தகாத தொடர்பை பேணியுள்ளார்.இவ்வுறவு நாளடைவில் மிக நெருக்கமாகி,தகாத நடத்தையிலும் ஈடுபட வைத்துள்ளது.இதனால்,கருவுற்ற ஆறுமாத சிசுவைக் கலைப்பதற்காக இந்த யுவதி முயன்றுள்ளார்.இந்த முயற்சி பலிக்காத நிலையில்,கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர், தனது தாயின் வீட்டில் பிரசவம் இடம்பெற்றது. பின்னர் சிசுவை, பழைய துணிகளால் சுற்றி ஒரு பையினுள் வைத்து தன்னுடன் தகாத உறவில் ஈடுபட்டவரின் தாயாரின் வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார் அந்த யுவதி.

மூன்று நாட்களின் பின்னர் வீட்டில் துர்நாற்றம் வீசியதையடுத்து, குறித்த யுவதியுடன் தொடர்பை பேணியவரின் தாயார், துணியால் சுற்றப்பட்டிருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது, சிசு காணப்பட்டது.இதையடுத்து,குடும்பத்தினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இவ்வாறு பிரசவித்த சிசுவின் உடல் பாகங்கள் சிதைவடைந்து காணப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# தமிழக முதலமைச்சருக்கு இந்திய துாதரகத்தின் ஊடாக மகஜர் கையளிப்பு

கோப்பாய் குறூப் நிருபர்

விவசாயிகள், கடற்தொழிலாளர்களுக்கு எரிபொருள் வழங்காமல் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் சமாசத் தலைவர் அன்னலிங்கம் அன்ன ராசா தெரிவித்தார்.

யாழ். இந்திய துணைத் துாதரகத்தில் நேற்று (08) வடமாகாண கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சரிடம் கையளிப்பதற்காக மகஜர் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்,



விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியாமையால் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாடு தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியிருக்கின்ற நிலையில் விவசாயிகள் மற்றும் கடற்தொழிலாளர்கள் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

ஆனால் யாழ் மாவட்டத்தில் அரச அதிகாரிகளுக்கு தாராளமாக எரிபொருளை வழங்குகிறார்கள் ஆனால் மீனவர்கள் விவசாயிகளுக்கு வழங்க பின்னடிக்கிறார்கள்.

வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுத்துறையில் தேர்ச்சியில் சிறந்த மாவட்டமாக விளங்கிய ஒரு மாவட்டம் .

ஆனால் யாழில் எரிபொருள் பங்கீட்டு முறை தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் கூட்டுறவுத் துறையில் தேர்ச்சி பெற்ற பலர் தற்போது நிர்வாக துறையில் இருக்கும் மேல் அதிகாரிகள் அவர்களிடம் பங்கீட்டு முறைபற்றி ஆலோசனையை பெறலாம்.

ஆகவே அதிகாரிகள் உரிய முறையில் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# முள்ளியவளை லங்கா ஐ.ஓ.சி உரிமையாளர் மீது தாக்குதல்

## இருவர் விளக்கமறியலில்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு முள்ளியவளை லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மீது தாக்குதல் நடத்திய இருவரை முள்ளியவளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே அவர்களை எதிர்வரும் 21.07.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று (07.07.22) மாலை மக்களுக்கு டோக்கன் அடிப்படையில் பெற்றோல் வழங்கப்பட்டுக்கொண்டிருந்த வேளை முச்சக்கரவண்டி ஒன்றில் சென்ற மூன்று பேர் அதிகார தொனியில் பெற்றோல் அடிக்குமாறு கோரியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட முரண்பாட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள். தாக்குதல் சம்பவத்தினை தொடர்ந்து மக்களுக்கு பெற்றோல் வழங்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர் முறைப்பாடு செய்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின்



பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கும் வரை எரிபொருள் விநியோகத்தினை முள்ளியவளை லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில் முச்சக்கரவண்டியில் வந்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையளரை தாக்கிய குற்றச்சாட்டில் முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவரும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 21.07.2022 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தனிநபர் உடமையிலிருந்த டீசல் அத்தியாவசிய சேவைகளுக்காக கையளிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி நீதிமன்றினால் தனிநபர் உடமையிலிருந்த 6800 லீற்றர் டீசல் அத்தியாவசிய சேவைகளுக்காக மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது,

கிளிநொச்சி கரடிபோக்கு பகுதியில் கடந்த வாரம் சட்டத்திற்கு முரணாக கையிருப்பில் வைத்திருந்த டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் இவ்வாறு நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகளுக்காக பயன்படுத்த கையளிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக நேற்றைய தினம் 12.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் உள்ளிட்ட குழுவினர் நீதிமன்ற பதிவாளரை சந்தித்து எரிபொருட்களை பெற்றுக்கொண்டனர்.

# தமிழக மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ். விசேட நிருபர்

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களுக்கும் 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் 12 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மறுநாள் திங்கட்கிழமை கடற்தொழில் நீரியல் வளத்துறையினரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து வெள்ளிக்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம்



இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மீனவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. படகு மற்றும் கடற்தொழில் உபகரணங்களை அரசுடமையாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது



யாழ்.விசேட நிருபர்

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கைது செய்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ்.பகுதியில் வீடொன்றில் டீசலை பதுக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவ்விடத்தை முற்று கையிட்டு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது 300லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டதோடு டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

# வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்க செஞ்சிலுவைச் சங்கம் ஒத்துழைப்பு

கரவெட்டி தினகரன் நிருபர்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் அனைவரும் வீடுகளில் பயிரிடுமாறு செஞ்சிலுவைச் சங்கம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட விதைகள் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு விதைகள் வழங்கும் நிகழ்வு கரவெட்டி பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைவர் ரகு தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைவர் K.பாலகிருஷ்ணன், கரவெட்டி பிரதேச செயலர் தயாரூபன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு விதைகள் மற்றும் பொருட்களை வழங்கி வைத்தனர்.

# தொல்லியல் சார் தொழில் நுட்பங்கள் தொடர்பான பயிற்சி

யாழ். விசேட நிருபர்

யாழ்.பல்கலை மாணவர்களுக்கான தொல்லியல் சார் தொழில் நுட்பங்கள் தொடர்பான பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்.கோட்டையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொல்லியல் சார் தொழில்நுட்பங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்துாதர் ராகேஷ்



நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், தொல்லியல் துறை விரிவுரையாளர்கள் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த ஒருவர் கைது

யாழ்.விசேட நிருபர்



யாழ். நகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளை உடமையில் கொண்டு சென்ற ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர் மானிப்பாய் வீதி சத்திரச்சந்திக்கு அண்மையில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். யாழ்பாணம் குருநகர் ஐந்துமாடி பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யபட்டுள்ளார்.

# தென்மராட்சிப் பகுதியில் எரிபொருளுக்காக காத்திருந்த வாகனங்கள் சேதம்

சாவகச்சேரி விஷேட நிருபர்


தென்மராட்சிப் பகுதியில் எரிபொருளுக்காக நாள் கணக்கில் காத்திருந்த வாகனங்கள் சில சேதமடைந்திருப்பதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களை வரிசையில் நிறுத்திவிட்டு உணவுக்காக அல்லது வேறு தேவைகளுக்காக செல்லும் போது சில குழுவினர் வேண்டுமென்றே வாகனங்களை சேதப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. தென்மராட்சிப் பகுதியில் எரிபொருள் வரிசையில் காத்திருக்கும் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் திருடப்படும் சம்பவங்கள் இடம்பெறும் அதேவேளையில், கைகலப்பு சம்பவங்கள் பலவும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் எரிபொருள் பெற வந்து தாம் 40 ஆயிரம் ரூபாய் வரை வாகனங்களை திருத்துவதற்கு செலவழிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் சாரதிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.



முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஆதரவுடன் மாவட்ட குத்துச் சண்டை சங்கத்தினால் குத்துச் சண்டை பயிற்சிகள் மாவட்ட விளையாட்டு பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மலைச்சாரல்



# தோட்ட நிர்வாகங்களை பாதுகாக்கும் எந்த அரசாலும் பெருந்தோட்ட மக்களுக்கு விடிவில்லை



## ஆகக்குறைந்த ஊதியத்திற்கும் உழைப்பை சுரண்டுவதற்காகவும் கொத்தடிமைகளாக பெருந்தோட்ட உழைப்பாளர்களை வைத்துக்கொள்வதற்கே தோட்ட நிர்வாகங்கள் முனைகின்றன....

ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் பெருந்தோட்ட மக்களை பாதுகாப்பதை விட தோட்ட நிறுவனங்களையே பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. பல வருட காலமாக பெருந்தோட்ட சமூகம் மாற்றம் பெற வேண்டுவதோடு இந்த மாற்றத்தின் ஊடாகவே முழு மலையக மக்களினதும் வாழ்க்கை கட்டமைப்பு மாற்றமடையும். இதற்காக பல சமூக ஆர்வலர்கள் சமூக மாற்றத்திற்காக முன்னின்று செயற்பட்டு வருகின்றனர். ஆனால் தோட்டப்புற முறைமையை முற்றாக மாற்ற எந்த அரசாங்கங்களும் தோட்ட நிர்வாகிகளும் இதுவரையில் முன் வருவதில் ஆர்வம் காட்டியதில்லை. ஏனெனில் இந்த பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை ஆகக்குறைந்த ஊதியத்திற்கும் உழைப்பை சுரண்டுவதற்காக கொத்தடிமைகளாக மலையக மக்களை வைத்துக்கொள்வதற்கு தோட்ட நிர்வாகங்கள் முனைகின்றன.இம்முறையே ஆதிக்க வர்க்கத்திற்கும் இலகுவானதாக இருக்கும் என்பதனாலேயே அரசாங்கம் பெருந்தோட்ட மக்களை பாதுகாப்பதை விட தோட்ட நிறுவனங்களையே பாதுகாப்பதில் அக்கறை செலுத்துகிறது என்பது உண்மையே.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு நகர்புற மற்றும் கிராமப்புற மக்களைவிட பெருந்தோட்ட மக்களே பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். உணவு, மருத்துவம் என அத்தியாவசிய தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பெருந்தோட்ட நிறுவனங்கள் மலையக மக்களின் நிலத்தில் அக்கறை செலுத்துவதில்லை. பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் தரிசு நிலங்களில் மாற்று பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு பெருந்தோட்ட பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவது கிடையாது. தோயிலை தோட்டங்களை விடுத்து மாற்று வழிகளுக்கு செல்வதில் துளியளவும் விருப்பமோ அல்லது சிந்தனை போக்கு அறவே இல்லை.மக்களின் அடிமைத்தனத்தில் இலாபம் மீட்டும் செயற்பாடே தொடர்கிறது.



தற்போது பெருந்தோட்ட கம்பனிகள் பெருந்தோட்ட காணிகளில் பயிரிடப்பட்டுள்ள தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை உரிய முறையில் பராமரிப்பது கிடையாது. பயிர்களுக்கு தேவையான உரம் மற்றும் களை கட்டுப்பாடு நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. இதனால் தேயிலை மலைகளில் குளவிக்கூடு மற்றும் மிருகங்களின் சஞ்சாரமும் அதிகரித்துள்ளன.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் குளவி மற்றும் மிருகங்களின் தாக்குதல் என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது. குறிப்பாக பெருந்தோட்ட பயிர் செய்கைக்கு தேவையான உரம் மற்றும் களைகளை கட்டுப்படுத்த எந்த வித கிருமிநாசிஙளும் பயன்படுத்துவது கிடையாது.கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களே கொழுந்து பறிக்கும் சந்தர்ப்பத்தில் களைகளை அகற்றிவிட்டு நாள் சம்பளத்திற்கான 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டிநிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு 20 கிலோ தேயிலை கொழுந்து பறிக்க முடியாத தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. அத்துடன் தேயிலை மலைகளை உரிய முறையில் பராமரிக்காமல் கொழுந்து பறிப்பதில் தொழிலாளர்கள் பல பிரச்சினைகளை சந்திக்க நேரிட்டுள்ளது.

தோட்ட நிர்வாகங்கள் ஒருநாள் கூலிக்கு 20 கிலோ கிராம் கொழுந்து பறிக்குமாறு தொடர்ந்து அழுத்தங்கள் பிரயோகிப்பதால் பெண் தொழிலாளர்கள் மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். தோட்ட நிர்வாகம் கோரும் அளவுக்கு கொழுந்து பறிக்க மலைகளில் கொழுந்து விளைவது கிடையாது.

இன்றைய பொருளாதார நிலைமை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுகள் தொடர்பில் ஒப்பிடுகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகவே இருக்கின்றது.

ஒரு நாள் பெயருக்கு 20 கிலோ என்றால் ஒரு கிலோ குறைந்தாலும் முழு பெயர் மறுக்கப்படும்.இப்படிப்பட்ட சுரண்டல் முறையால் தொழிலாளர் சம்பளம் அதிகரிக்க அதிகரிக்க சுரண்டல்களும் அதிகரிக்கும்.தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகங்களின் செயற்பாட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் போது தொழில் உரிமையை மீறும் வகையில் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்து போராட்டங்களை தடுக்க தோட்ட நிர்வாகிகள் முயற்சிக்கின்றனர். இந்நிலைமை பெருந்தோட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக நீடித்தால் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக தோட்டங்களில் தொழில் புரிய வேண்டி வரும்.

இரா. சுரேஷ்குமார்

# ஹற்றன் இ.போ.ச பஸ்களை மறித்து தனியார் பஸ் சாரதிகள் ஆர்ப்பாட்டம்

## டீசல் வழங்காததால் ஹற்றன் பஸ் நிலையத்தில் குழப்பம்

ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஹற்றன் டிப்போவினால் ஹற்றனில் உள்ள தனியார் பஸ்களுக்கு கடந்த காலங்களில் டீசல் வழங்கப்பட்டு வந்தது.

எனினும், கடந்த 7 நாட்களாக ஹற்றன் டிப்போவினால் தனியார் பஸ்களுக்கு டீசலை வழங்கவில்லை. இதனால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஹற்றன் பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் இயங்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களை மறித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் (08) நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹற்றன் பஸ் நிலையத்திலிருந்து தினசரி நீண்ட மற்றும் குறுகிய தூர பிரதேசங்களுக்கு செல்லும் தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் பஸ் உரிமையாளர்கள் நேற்று காலை ஹற்றன் பஸ் நிலையத்தில்





இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் சில தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்கப்பட்டதாகவும், ஏனையவர்களுக்கு நேற்று டீசல் வழங்கப்படும் என தெரிவித்து டோக்கன் வழங்கப்பட்டதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்தனர். எனினும், நேற்று டோக்கன் வழங்கப்பட்ட பஸ் உரிமையார்கள் டீசல் பெற்றுக் கொள்வதற்காக சென்ற பொழுது, டீசல் இல்லை முடிந்து விட்டது என ஹற்றன் டிப்போ அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களை மறித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர். மேலும், கடந்த சில நாட்களாக எரிபொருள் கிடைக்காததால் பல தனியார் பஸ்கள் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஈடுப்படுவோரும் பெரும் பாதிப்புக்கு உட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மத்திய மலைநாட்டில் தொடரும்

# சீரற்ற காலநிலை; சாரதிகளுக்கு எச்சரிக்கை



ஹற்றன் விசேட நிருபர்

மத்திய மலைநாட்டில் சில தினங்களாக நீரற்ற காலநிலை தொடர்ந்த வண்ணம் உள்ளன.மலையுடனான காலநிலையும் கடும் காற்றும் வீசுகிறது.கடும் காற்று காரணமாக மரத்தின் கிளைகள் முறிந்து வீழ்ந்து போக்குவரத்து பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன் கொழும்பு மற்றும் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதிகளில் அடிக்கடி பனிமூட்டம் காணப்படுவதால் சாரதிகள் அவதானமாக செயற்படுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் மழையுடனான கால நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளன இரவு நேரங்களில் மழையுடன் கடும் காற்றும் வீசுகின்றன.

எனவே மரங்களுக்கு சமீபமாக இருப்பவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

குறித்த மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக பல இடங்களில் மண் சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளன எனவே அபாயம் நிறைந் பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

# நமுனுகுல பகுதியில் சந்தேக நபரை தேடி 06 கிலோ மீற்றர் நடந்த பொலிஸார்

நமுனுகுல பகுதியில் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்காக பொலிஸார் 6 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றுள்ளதாக தெரியவருகிறது.

நமுனுகுல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 3 பொலிஸ் கான்ஸ்டபிள்களே இவ்வாறு நபர் ஒருவரைக் கைதுசெய்ய நடந்து சென்றனர் என பதுளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சுஜித் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

பதுளை பொது வைத்தியசாலையில் குழந்தையொன்றை பிரசவித்த கொட்டுகஹதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர், தனது குழந்தை மற்றும் கணவருடன் ஓட்டோ ஒன்றில் சென்றுக் கொண்டிருந்த போது, லொறியொன்று வீதியின் நடுவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் இதன் போது குறித்த லொறியின் சாரதிக்கும் ஓட்டோவில் பயணித்தவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து லொறியில் இருந்த ஒருவர் ஓட்டோவில் இருந்த கணவனையும் மனைவியையும் தாக்கிவிட்டு பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்ய செல்ல பொலிஸாரின் வாகனத்தில் எரிபொருள் இருக்கவில்லை என்றும் இதனால் 6 கிலோமீற்றர் நடந்து சென்று பொலிஸார் சந்தேகநபரை தேடியுள்ளதாகவும் பதுளை சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி சுஜித் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

# எட்டியாந்தோட்டையில் இலவச பொருட்கள் வழங்கும் கடை உரிமையாளர்



எட்டியாந்தோட்டை மீகஹாவெல்ல பிரதேச வர்த்தகர் ஒருவர் பொருளாதார நெருக்கடி காரணமாக இலவச பொருட்கள் வழங்கலை முன்னெடுத்துள்ளார்.

இப் பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தன்னால் முடிந்த தீர்வாக, தனது வர்த்தக நிலையத்தில் உலர் உணவுப் பொருள்களை இலவசமாக எடுத்துச் செல்லும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், மக்களின் பொருளாதார நெருக்கடிக்கு தன்னால் முடிந்த தீர்வாக இந்த செயற்பாட்டை முன்னெடுப்பதுடன் கடந்த 10 நாட்களாக செய்து வருவதாகத் தெரிவித்தார்.

தனது வர்த்தக நிலையத்துக்கு முன்பாக உள்ள மேசையில் தினமும் 5,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வைப்பதாகவும் பலர் இதனை எடுத்துச் செல்லும் நிலையில், தமது வர்த்தக நிலையத்துக்கு வருகைத் தரும் நுகர்வோரும் தம்மால் இயன்ற உதவிகளை இதற்கு வழங்குவதாகத் தெரிவித்தார். அத்துடன் தனது வர்த்தக நிலையத்துக்கு வருகைத் தரும் விற்பனை பிரதிநிதிகளும் இந்த நடவடிக்கைக்கு உதவுவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த பிரதேசத்திலுள்ள கர்ப்பிணிகள், தாய்மார் உள்ளிட்டோருக்கான போக்குவரத்து சேவைகளையும் கடந்த 5 நாட்களாக முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தார். இதற்காக தனது ஓட்டோ, கெப் வாகனம் உள்ளிட்ட 9 வாகனங்களை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

# நகர்வலம்



## ஐரோப்பிய ஒன்றிய தூதுவருக்கு அமைச்சர் பீரிஸ்

# இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் விளக்கமளிப்பு



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை மற்றும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான அபிவிருத்திகள் குறித்து கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவருக்கு வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல், பீரிஸ் விளக்கமளித்துள்ளார்.

வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சாய்பியை (06) அமைச்சு அலுவலகத்தில் சந்தித்தார். இதன் போதே அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது, ஏனைய விடயங்களுக்கிடையில், தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பான அபிவிருத்திகள், 2012ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை இல. 01 இன் கீழ் தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் பட்டியலை மீளாய்வு செய்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை, சுயாதீன நிறுவனங்களால் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் அரசியலமைப்பின் உத்தேச 21ஆவது திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் குறித்தும் அமைச்சர் பீரிஸ் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

நிறுவப்பட்ட உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலம் அரசாங்கம் சரிபார்க்கக்கூடிய மற்றும் அளவிடக்கூடிய பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளதென்றும், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தேவையான அரசியல் சீர்திருத்தங்களை வழங்குவதில் கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார்.

சமூகத்தின் நலிவடைந்த பிரிவினரை இலக்காகக் கொண்ட பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளை உள்ளடக்கிய புதிய வரவு செலவுத் திட்டத்தை விரைவில் சமர்ப்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அண்மைய முன்னேற்றங்கள் குறித்து தெரிவிக்கப்பட்ட விவரங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் பாராட்டினார். 2024 2033ஆம் ஆண்டுக்கான அடுத்த ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பி. ஒழுங்குமுறை தற்போது ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவிலும் ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்திலும் கலந்துரையாடப்பட்டு வருவதாக தூதுவர் தெரிவித்தார்.

அண்மையில் முடிவடைந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத் தொடர் உட்பட மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்களுடன் இலங்கை தனது ஆக்கபூர்வமான ஈடுபாட்டைத் தொடர்வதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.



ஈரோடு மத்திய மின் மயான அறக்கட்டளையின் (RCECECT) ரோட்டரி கழகம் இலங்கை மக்களுக்கு வழங்குவதற்காக பெறுமதிமிக்க மருத்துவப் பொருட்களை வழங்கியுள்ளது. இவ்வாறு இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம் 5.5 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்களை வழங்கியுள்ளது. RCECECT இன் நிறுவன தலைவரான டாக்டர் இ.கே.சகாதேவன், சான்சரி வளாகத்தில் வைத்து துணை உயர் ஆணையர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரனிடம் இவற்றை வழங்கினார். இவை இலங்கை தேசிய சுகாதாரப் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்குவதவதற்காக, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக துணை உயர் ஸ்தானிகர் RCECECT க்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

# பேருவளை மருதானையில் இருந்து பேருவளை நகர் வரை பஸ் சேவை ஆரம்பிக்க கோரல்

அழுத்கமையில் இருந்து பேருவளை மருதானை ஊடாக பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச்சேவை அண்மையில் இடைநிறுத்தப்பட்டது தற்போது பேருவளை மருதானையில் இருந்து சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை முச்சக்கர வண்டி கூட இல்லாத காரணத்தினால் பேருவளை நகருக்கு நடந்தே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அரசியல் பிரமுகர்கள் குறுகிய கால கட்டத்துக்காவது இச் சேவையை ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுப்பதாக பாஸி ஸுபைர் தெரிவித்தார்.





இந்து பௌத்த நிவாரண திட்டத்தின் கீழ் ஹாங் ஹாங் லிமிடெட் புத்ததர்ம மையம் பேராசிரியர் தம்மஜோதி தேரர் ஊடாக இலங்கை மக்களுக்கு வழங்கிய நிதிஉதவி மூலம் இலங்கைக்கான இந்து, பௌத்த அமைப்பு மக்களுக்கு கட்டம் கட்டமாக உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகிறது. இதன் ஒரு கட்டமாக பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் வரவேற்பு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் க. ஞானசேகரம், திருமதி சிவாநந்தனி துரைசாமி தலைமையிலான இலங்கை இந்துப் பேரவை, கிருலப்பன இந்துக்கல்லூரி மாணவர்களின் 200 குடும்பங்களை தெரிவு செய்து அவற்றை வழங்கியது. நிகழ்வில் பௌத்த அமைப்பின் தலைவர் பேராசிரியர் தம்மஜோதி தோழர், அதிபர் இராஜமாலினி சின்னையா, ஆசிரியர் சுமாதரன், இராஜேந்திரன் செட்டியார் ஆகியோர் மாணவ குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்குவதை காணலாம்.



பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான "43வது டிவிசன்" பிரதிநிதிகள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரிகளின் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று (08) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் 43ஆவது டிவிசனின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சமிபிக்க ரணவக்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய திருக்கொடியேற்றம் திங்களன்று

## 28ஆம் திகதி தீர்த்த உற்சவம்

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த உற்சவம் 17 நாட்கள் நடைபெற்று ஜுலை மாதம் இருபத்தி எட்டாம் (28) திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு ஜாம பூஜைகள் செய்யப்பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் ஆடிவேல் உற்சவம் கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக நடைபெறவில்லை. இம்முறை இதனை வெகு சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய தலைவர் சுரேஷ் மேலும் தெரிவித்தார்.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவம் என்பதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



விசேடமாக ஆலயம் சார்பில் அன்னதான குழு ஒன்றும் புதிதாக உருவாக்கப்பட்டு இருப்பதாகவும் அந்தக் குழுவிற்கு பலர் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்த குழுவினரே ஆலயத்தில் நடைபெறுகின்ற அனைத்து அன்னதான நிகழ்வையும் மேற்கொள்வார்கள்.

அதேவேளை அதற்கு உதவ விரும்புகின்ற பொதுமக்கள் ஆலய நிர்வாகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துகின்றவர்களுக்கு வசதியாக பத்து சிவாச்சாரியார்கள் உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றுகின்ற வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.





நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பெண்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்நிலைமையில் 'ஜனனம்' அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி வி. ஜனகனின் ஏற்பாட்டில் நூறு (100) பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான உதவி வழங்கும் செயற்திட்டம் வெள்ளவத்தை மயூராபதி ஆலய வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாநிதி வி. ஜனகன், மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெரியசாமி சுந்தரலிங்கம், ஐக்கிய மக்கள் சக்தியின் துணைச்செயலாளர் மாச்சந்திர பிரகாஷ் மற்றும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர் அதிவண. பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ மற்றும் 'ஜனனம்' அறக்கட்டளை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்

# இறையன்பு



தன்னிகர் இல்லா
தலைமை ஆகி
அன்பில் உலகை
ஆளும் இறையே

அடி பணிந்தே
அன்பாய்க் கேட்க
அடிமை எமக்கு
அருள்வாய் இறையே

மங்கல வாழ்த்து
மடை திறக்க
பொங்கிச் செல்வம்
பொழியும் இறையே

குறைகள் கூடி
குவலயம் நிறைய
கறைகள் கழுவிக்
காத்திடும் இறையே

**ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்



# முட்டையின் ஓடுகளிலான வாழ்க்கை

இது இக்கணமே
உடைந்துநொறுங்கும் சாத்தியங்களால்
நிரப்பப்பட்டிருப்பது தெளிவாகிற்று

இன்றைக்கும்
எழுந்து விழிப்பதற்கு ஏதுவாக
அழகும்,பதுமையும் நிறைந்த
பெரும் தரித்திரங்களை
வரிசையில் அழைத்துவந்து
நிறுத்திவிடுகிறது வாசலில்.......

இதிலிருந்தே அறிய முடிகிறது
இவை பாதுகாப்பற்ற மேற்பூச்சு நிறைந்த
படாடோபமென்று

ஒருபுறம்
ஒழுங்கு படுத்தல்களோ,உறுதிப்பாடோ இல்லாது
சிக்கல்களை தோற்றுவிக்கிறபடி
நிலத்தின் பயங்கரம்

வெடிப்புகளுக்குள்
குப்புற தள்ளிவிடுவதாய் ஜீவிதம்
தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்த நொடிவரை....

மறுபுறம்
எவரையும் பயமுறுத்தி வீழ்த்த பயிற்றப்பட்ட
மிருகத்தைப்போல்
உறுமியபடி துரத்திக்கொண்டிருக்கிறது பஞ்சகாலம்

என்ன சொல்ல
தலைவிதியில்
சமைபடுகிறது பொழுதுகள்!

**ரோஷான் ஏ.ஜிப்ரி**
வாங்காமம்,
இறக்காமம்.



# பொய்த்துப் போன கனவு

சுமந்த காதல் அழியாமல் இருக்கிறது...
இன்னும் என்னுள் உன்னை சுமந்தவாறே...
இருந்தும் எப்படி நான் மறந்தேன்...
பொய்த்துப் போன கனவு நீயென...

என்றோ நீ பேசிய வார்த்தைகளால்...
என்னில் இன்றிந்த நம்பிக்கையின் சுடர்...
என்றாவது வந்துவிடுவாய் என்றென்னில் அசரீரியாகிறது...


அதனாலோ இதயம் நினைவுகளை உயிர்க்கிறது...
இது சிறு பிரிவென்றே சொல்கிறது...

சிற்றிடைவெளியில் கூட உந்தன் நினைவில்...
கனப்பொழுதிலும் மனம் தனிமையை நாடுகிறது...

இருட்டிய நொடிகளில் உறக்கமும் தொலைகிறது...
வாசல் கதவில் எதிர்பார்ப்பும் புதைகிறது...
ஏதோவொரு ஏக்கம் நெஞ்சில் கனக்கிறது...
எங்கோ கேட்கும் குரலும் உனதாகிறது...

பாசத்தின் பிணைப்பும் நம்பிக்கையும் வெல்லும்...
எனக்குள் வாழும் நீயும் மீள்வாய்...
இதுவொன்றும் நிரந்தர விலகல் அல்லவே...

**மலையருவி பானு**
( பாத்திமா ஸகீனா )



# ஏழ்மையின் வலி

தடம்மாறி
போகின்ற நாட்டில்
தடுமாறிப் போகின்ற ஏழைகள்...!

தன்மானத்தை
இழக்க
முடியாத
தவறிய வார்த்தைகள்...!

தன்னகத்தை சமாளிக்க நினைத்து
நிலை குலைய வைத்த
பட்டினி...!

பல நாளாய்
அடக்கி வைத்த அழுகை...

விம்மி விம்மி அழ நினைத்த
தருணம்...

வீர வசனம் பேசும்
வீரமகன் பெருமழை போல
பெருகி வடிக்கும் கண்ணீருடன்
மடிய நினைக்கும் தருணம்...

**மண்ணின் ராணி**
சிகானா உமர் லெப்பை
ஏறாவூர்

# மறைந்ததே மாண்புயர் நட்பு




ஆன்மாக்கள்
அனைத்தினதும்
ஆயுள் கெடுமுடிய
நிச்சயமாய்
மரணத்தை
சுவைத்தே தீரும்

அருளாளன் அவன்
அருளிய
அருள்மறை கூற்றது

தக்தீர் இறைநியதி
விசுவாசிகளின்
சத்தியம் பிரமாணம்
ஆழ்ந்த நம்பிக்கை

ஆமன்னா ஸல்லம்னா
செவியுற்றோம்
வழிப்பட்டோமென
எமக்கான கட்டளையது

பேரிடிகளாய்
பேரிழப்புகள்
எம்மை சூழ்ந்தாலும்
இரக்கத்தில்
உச்சமானவன்
இன்னாலில்லாஹ்வை
கற்றத் தந்தான்
இதயத்தை சாந்தப்படுத்த

உதிர உறவுகளின்
மீளாப் பிரிவால்
உறைந்து போய்
விடாமல்

மீளாத் துயரிலிருந்து
மீண்டெழுந்தே
மண்ணறை ஏகி
மனதில் வாழுகின்ற
நம் உறவுகளுக்காய்

மன்றாடியே
மறையோனிடம் நாளை
மஹ்சர் வரும் வரைக்கும்

பிரார்த்தனைகளோடு
நற்காரியங்களையும்
அன்னார்களது பெயரால் செய்திட

மண்ணறை வாழ்வு
மணங் கமழ்ந்திடும்
விண்ணிலிருந்தே
வானத்து வஞ்சியரும்
வாழ்த்துச் செல்ல
இறங்கிடுவர்

ஆசிரியப் பெருந்தகையே
அன்புருவே
இன்னும் நான்
மீளவில்லை

தாங்களின்
மறைவுச் செய்தி கேட்டே
இறை வசனங்களும்
நபிகளாரின்
போன்றவைகளும்

இதயத்தை
ஆசுவாசப்படுத்தியதே
எனக்கான மன
அமைதிக்காகவும்

எமதான நட்பிற்காய்
இருவிழி ஓரங்களில்
ஈரம் கசிந்திடவே
இரங்கலாய்
இவ்வெழுத்துக்களை
சமர்ப்பிக்கின்றேன்

வாத்சல்ய சலாமுடன்
வாஞ்சையோடு
விளித்தே நான்

போரதொட்ட றிஸ்மியென
கதைத்திடும் சாந்தமான குரல்

எங்களை
அழ வைத்தே
அன்பு உறவுகளை
சோகத்தில் ஆழ்த்தியதே
மீளாத் துயில்
கொண்டதே

கடந்த நோன்புக்
கவியரங்கில்
முதன் முதலாய்
மலாய் மொழியில் என்னை
கவிபாடச் செய்த
செம்மலே

கண்ணீரில்
ஆழ்த்தி விட்டு
இத்தனை
அவசரமாய்

காலத்தோடு
கரைந்ததும் ஏனோ?

வகவக் கவிகளோடு
ஊராரும் கலந்தே
கவி விருந்து
உங்களது தலைமையிலான
விருந்தோம்பலும்
இன்று இனிக்கின்றது
உள்ளம் மறக்க
மறுக்கின்றது

பெருமகனே நீ
இன்றில்லையே
எம்மனசு தாங்களையே
உங்களது தாளாத
பிரிவால் துயுருரும்
அன்பு உறவுகளுக்காய்
குடும்பத்தினருக்காய்
அமைதியையும்
பொறுமையையும்
தாராளமாய் தந்தருள
பேரருளாளனை
உருக்கமாய் வேண்டுகிறேன்

**மலாய்கவி டிவங்சோ**

# நாளை நமதே



கூடுகின்றக் கார்மேகம் கொட்டிவிட மறக்குமெனில்
குவலயமே பாலைவன மாகும்

நாடுகின்ற மாமழையும் நமக்கின்றிப் போகுமெனில்
நற்பயிர்க்குத் தானிங்கு சேதம்

தேடுகின்ற நிழல்பரப்பி தெருவோரம் நிற்கின்றத்
திடமான மரங்கூட வாடும்

ஓடுகின்ற நதிவற்றி ஊர்முழுதும் பசுமையின்றி
உரசுமுன்பு தீப்பிடிக்கக் கூடும்.

ஆடுவெட்டி மாடுவெட்டி அவசியமே இல்லாமல்
அத்தனையும் உண்ணுவது போலும்

காடுவெட்டிக் காசாக்கிக் கைக்குள்ளே போடுகின்றக்
காரியங்கள் விட்டாலே போதும்

பாடுபட்டு உழைப்பதற்குப் பாங்கான நிலைதோன்றி
பார்மீண்டும் பழையதுபோ லாகும்

நாடுகெட்டுச் சீரழியும் நாசங்கள் இல்லாத
நாளையிங்கு நமக்காகக் கூடும்

**மெய்யன் நடராஜ்**

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் ஸ்மித் ,மார்னஸ் லபுசேன்ஸ் ஆகியோரின்

சதத்தின் உதவியுடன் அவ்வணி முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களை பெற்றுள்ளது.

அவ்வணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய கவாஜா மற்றும் டேவிட் வோர்னர் ஆகியோர் முறையே 37 ,05 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க பின்னர் வந்த லபுகேன்ஸ் மற்றும் ஸ்மித் நிலைத்து ஆடி இலங்கை பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியை கொடுத்து லபுகேன்ஸ் 104 ஓட்டங்களையும் ஸ்மித் 109 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருக்க ஹெட் 12 ஓட்டங்களையும் கமரூன் கிரீன் 4 ஓட்டங்களையும் பெற்றபோது ஆட்டமிழக்க அலக் கேரி 16 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில் மென்டிஸ்,ராஜித தலா ஒரு விக்கெட்டையும் பிரபத் ஜயசூரிய 3 விக்கெட்டுக்களையும் பதம் பார்த்னர்.

காலி சர்வதேச மைதானத்தில் ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இலங்கை அணியானது முதல் டெஸ்ட் போட்டியிலிருந்து நான்கு மாற்றங்களுடன் களமிறங்கவுள்ளது. அஞ்செலோ மெதிவ்ஸ் முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் விளையாடியிருந்தார். இவருக்கு கொவிட்19 தொற்று ஏற்பட்டதன் காரணமாக போட்டியிலிருந்து நீக்கப்பட்டதுடன், ஓசத பெர்னாண்டோ இவருக்கு பதிலாக விளையாடினார்.

தற்போது கொவிட்19 தொற்றிலிருந்து அஞ்செலோ மெதிவ்ஸ் குணமடைந்து மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். அதேநேரம், ஜெப்ரி வெண்டர்சே, தனஞ்சய டி சில்வா மற்றும் அசித பெர்னாண்டோ ஆகியோருக்கு கொவிட்19 தொற்று ஏற்பட்டுள்ளதால் இவர்கள் மூவரும் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இவர்களுக்கு பதிலாக பிரபாத் ஜயசூரிய இலங்கை டெஸ்ட் அணிக்கான அறிமுகத்தை பெற்றுக்கொண்டார். இவர் இறுதியாக

### இலங்கையுடனான 2 ஆவது டெஸ்ட்

# ஆஸி அணி 5/298 ஓட்டங்கள் குவிப்பு





2018ம் ஆண்டு நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடியிருந்தார். இவருடன் கமிந்து மெண்டிஸ் மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோரும் டெஸ்ட் அறிமுகத்தை பெற்றுக்கொண்டனர். இதேவேளை வேகப் பந்துவீச்சாளர் அசித பெர்னாண்டோவுக்கு பதிலாக கசுன் ராஜித அணியில் இணைக்கப் பட்டார்.

அவுஸ்திரேலிய அணியை பொருத்தவரை முதல் போட்டியிலிருந்து மாற்றங்களின்றி இந்தப்போட்டியில் களமிறங்கியுள்ளது..

**இலங்கை அணி**

**திமுத் கருணாரத்ன, பெதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், அஞ்செலோ மெதிவ்ஸ், கமிந்து மெண்டிஸ், தினேஷ் சந்திமால், நிரோஷன் டிக்வெல்ல, ரமேஷ் மெண்டிஸ், மஹீஷ் தீக்ஷன, பிரபாத் ஜயசூரிய, கசுன் ராஜித.**

**அவுஸ்திரேலிய அணி**

**டேவிட் வோர்னர், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுசேங், ஸ்டீவ் ஸ்மித், டிராவிஷ் ஹெட், அலெக்ஷ் கெரி, கிரிஸ் கிரீன், பெட் கம்மின்ஸ், மிச்சல் ஸ்வெப்சன், நெதன் லையோன், மிச்சல் ஸ்டார்க்.**

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்..

## புத்தளம் போல்டன் கழகம் வெற்றி



**புத்தளம் தினகரன் நிருபர்**

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புத்தளம் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படுகின்ற தங்க மற்றும் வெள்ளி கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில் புத்தளம் போல்டன் கழகம் வெற்றி கொண்டது.

புத்தளம் ட்ரிபல் செவன் அணியினை 05:00 கோல்களினால் வெற்றி கொண்டதன் மூலம் போல்டன் கழகம் தங்க கிண்ண சுற்றுக்குள்ளும் தோல்வியடைந்த ட்ரிபல் செவன் அணி வெள்ளிக்கிண்ண சுற்றுக்குள் யும் உள்வாங்கப்பட்டுள்ளன.

போல்டன் அணிக்காக எம். ஆர். எம் சஸ்றான் 2 கோல்களையும், எம். எச். எம் அஸ்மிர், பி.எம். மிக்தாம் மற்றும் எம்.ஜெதா ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் பெற்றுக்கொடுத்தனர். மேற்குறித்த இந்த போட்டி வெள்ளிக்கிழமை (01) மாலை புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

புத்தளம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவரும் புத்தளம் நகர பிதாவுமான எம்.எஸ்.எம்.ரபீக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், போல்டன் கழகத்தின் முன்னாள் தோல் காப்பாளருமான எம்.எச்.எம். நவவி கௌரவ அதிதியாக பிரசன்னமாகியிருந்தார். இதன்போது இரண்டு கழகங்களிலும் சிறந்த வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன் சிரேஷ்ட வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்றமை சிறப்பம்சமாகும். போட்டிக்கு நடுவர்களாக ஏ.ஏ. கியாஸ், எம்.எம்.சிபான், எஸ்.ஆர். எம்.ஆஸாத், எம்.ஓ.ஜாக்கிர் ஆகியோர் கடமையாற்றினர்.

# பங்களாதேஷ் அணிக்கெதிரான ரி–20 தொடரை வென்றது மேற்கிந்திய தீவுகள் அணி

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி20 போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 20 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியது.

கயானா மைதானத்தில் கடந்த (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, அபீப் ஹொசைன் 50 ஓட்டங்களையும் லிடொன் தாஸ் 49 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ஹெய்டன் வோல்ஷ் 2 விக்கெட்டுகளையும், ஒடியன் ஸ்மித் மற்றும் ரொமாறியோ செப்பர்ட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 164 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 18.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.






இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, நிக்கோலஸ் பூரான் ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் கெய்ல் மேயர்ஸ் 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், நசும் அஹமட் 2 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன், சகிப் அல் ஹசன் மற்றும் அபீப் ஹொசைன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் நிக்கலோஸ் பூரான் தெரிவு செய்யப்பட்டார்.

# புத்தளத்தில் புதிய கால்பந்தாட்ட தொடர்

**புத்தளம் தினகரன் நிருபர்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கால்பந்தாட்ட தொடரின் முதலாவது போட்டியில் புத்தளத்தின் நடப்பு வருட சாம்பியனான லிவர்பூல் கழகம் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த போட்டி தொடரின் முதல் ஆட்டம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

முதல் போட்டியில் த்ரீ ஸ்டார்ஸ் அணியினை எதிர்கொண்ட லிவர்பூல் அணி 03 : 01 கோல்களினால் வெற்றி பெற்றது.

இலங்கை கால்ப்பந்தாட்ட சம்மேளனத்தின் நடாத்தப்படும் தங்கம் மற்றும் வெள்ளி வெற்றிக்கிண்ணத்துக்கான இந்த போட்டி தொடரில் புத்தளம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவாகியுள்ள 12 அணியினர் இரு குழுக்களாக பிரிந்து போட்டியிட உள்ளனர்.



போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் தங்கக்கிண்ண பிரிவுக்குள்ளும் தோல்வி அடையும் அணிகள் வெள்ளிக்கிண்ண பிரிவுக்குள்ளும் உள்வாங்கப்பட்டு தொடர்ந்து இரண்டாம் கட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளதாக புத்தளம் நகர பிதாவும், புத்தளம் கால்ப்பந்தாட்ட லீக்கின் தலைவருமான எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்தார்.

இந்த புதிய தொடரில் புத்தளம் லீக்கில் பதிவாகியுள்ள நியூ ஸ்டார்ஸ், அல்அஷ்ரக், த்ரீ ஸ்டார்ஸ், ஒடிடாஸ், லிவர்பூல், ட்ரிபிள் செவன், எருக்கலம்பிட்டி,பேர்ள்ஸ், விம்பிள்டன், யுனைடெட், நியூ ப்ரண்ட்ஸ், போல்டன் ஆகிய 12 கழகங்கள் இடம்பெற்றுள்ளன.

# இரு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க இலங்கை வந்த பாகிஸ்தான் அணி



இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கடந்த (06) இலங்கை வந்துள்ளது. இந்த சுற்றுப்பயணத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே இரண்டு டெஸ்ட் போட்டிகள் நடைபெற உள்ளன. இம்மாதம் 16-20 மற்றும் இம்மாதம் 24-28 ஆகிய இரண்டு டெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து மூன்று நாள் பயிற்சியுடன் சுற்றுப்பயணம் தொடங்குகிறது. முதலாவது போட்டி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.



# ஆசிய கால்பந்து நிர்வாக சபைக்கு ஜஸ்வர் தெரிவு

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதன் மூலம் ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினர் பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இலங்கை கால்பந்தாட்டத்திற்கு புதிய நம்பிக்கையாக மாறியுள்ள பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் உமர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

உமர் ஆசிய கால்பந்து சம்மேளனத்தில் இலங்கை கால்பந்தாட்டத்தின் வளர்ச்சிக்காக பாடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தெற்காசிய கால்பந்து வருடாந்த மாநாட்டில் உப தலைவர் ரஞ்சித் ரொட்ரிகோ மற்றும் செயலாளர் நாயகம் உபாலி ஹேவகே ஆகியோரும் பங்குபற்றினர். தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக பங்களாதேசத்தைச் சேர்ந்த காசி முகமது சலாவுதீன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# லீடர் M.H.M.அஷ்ரப் வித்தியாலயத்திலிருந்து 8 பேர் மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு

**சாய்ந்தமருது விசேட நிருபர்**

கல்முனை வலய மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் சாய்ந்தமருது கல்விக்கோட்டத்தை சேர்ந்த சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் அஷ்ரப் வித்தியால போட்டியாளர்கள் 8 பேர் வலய மட்டத்தில் வெற்றிபெற்று மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் 3 முதலிடங்களும் 5 இரண்டாமிடங்களும், 3 மூன்றாமிடங்களும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 9ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.